91 A/L
WEEKEND CLASSES
(Sat & Sun)
நடைபெறுகின்றன
★ பிரிவு II ★
08.30 - Zoology
09.30 - Botany
10.30 - Chemistry
11.30 - Physics
7.30 - Pure } Maths
8 30 - Applied } Maths
புதிய பகுதிகள்
ஆரம்பமாகியுள்ளன.
NEW MASTER INSTITUTE
B.M.C. Lane, Jaffna.
241, Navalar Road Jaffna.

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3-50

91 A/L
WEEKEND CLASSES
(Sat & Sun)
நடைபெறுகின்றன.
★ பிரிவு I ★
07.30 - Zoology
08.30 - Botany
07.30 - Pure } Maths
08.30 - Applied } Maths
09.30 - Chemistry
10.30 - Physics
எமது வழமையான
ஆசிரியர் குழு
NEW MASTER INSTITUTE
B.M C Lane, Jaffna.
241, Navalar Road Jaffna.

சுடர் 5: பிரமோதூத ஆடு வைகாசி மீ 23 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1410 துல்ஹஃதா பிறை 12 (60 : 06 - 1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 105

# மந்திரிசபையில் இன்று

# மாகாணசபை விடயம்

## கலைப்பதற்கான சட்டமூலம் குறித்து விரிவாக ஆராயப்படும்

கொழும்பு, ஜூன் 6

வடக்கு, கிழக்கு மாகாணசபையைக் கலைத்து அதற்குப் புதிதாகத் தேர்தல் நடத்துவது தொடர்பாக விடுதலைப் புலிகளுக்கு அரசாங்கம் வழங்கியிருக்கும் உறுதி மொழி பற்றி இன்று கொழும்பில் நடக்கும் வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தில் ஆராயப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கொழும்பு அரசியல் வட்டாரங்கள் இத்தகவலை தெரிவித்தன.

மாகாணசபையைக் கலைப்பதற்கான அதிகாரத்தை அளிக்கும் சட்டமூலம் பற்றியும் இன்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் ஆராய்ந்து முடிவெடுக்கக்கூடும்.

மாகாணசபைகளை கலைப்பது தொடர்பாக கட்டுப்பாடற்ற அதிகாரத்தை ஜனாதிபதிக்கு அல்லது அரசாங்கத்துக்கு வழங்கும் விதத்தில் புதிய சட்டம் கொண்டுவரப்படுவதை விடுதலைப் புலிகள் கட்டோடு விரும்பவில்லை என்றும் —

இதனை விடுதலைப் புலிகள் அரச தரப்பினருக்குத் திட்டவட்டமாகத் தெரியப்படுத்தியிருப்பதாகவும்கூறப்பட்டது.

ஆகவே தற்போதுகொண்டு வரப்படும் சட்டமூலம் சில விசேட நிலைமைகளின்கீழ் மட்டும் ஒரு குறிப்பிட்ட மாகாணசபையைக் கலைப்பதற்கு அதிகாரம் அளிக்கும் விதத்தில் அமைந்திருக்கும்

[6ஆம் பக்கம் பார்க்க]

## இந்திய மத்திய அமைச்சரவை விஸ்தரிக்கப்படும்

புதுடில்லி, ஜூன் 6

இந்திய மத்திய அமைச்சரவை விஸ்தரிக்கப்பட உள்ளது.

எப்போது விஸ்தரிக்கப்படும் என்பதை தற்போது சொல்வதற்கு இல்லை என்று இந்தியப் பிரதமர் வி.பி. சிங் சொன்னார். [ஒ-எ]

## உதவி அரச அதிபர்களுக்கு விசேட தொலைபேசி வசதி

கொழும்பு, ஜூன் 6

நாட்டில் உள்ள சகல உதவி அரசாங்க அதிபர்களுக்கும் நேரடித் தொலைபேசி வசதியும் பாக்ஸ் (FAX) வசதியும் செய்து கொடுக்க அரசு முடிவு செய்துள்ளது.

அரசின் செயற் திட்டங்களைவிரைவாகமேற்கொள்ள வசதியாக இந்த வசதி செய்து கொடுக்கப்பட இருக்கிறது.

இதற்கான நிதியை உலக வங்கி வழங்க முன்வந்துள்ளது. (ஒ-2-3)

## 20 ஆயிரம் பேர் தெரிவாகி இருந்தும்

## பல்கலைக் கழகங்களுக்கு 6,000 பேர் மட்டுமே அனுமதி

ஆறாயிரம் மாணவர்களை மட்டுமே பல்கலைக்கழகங்களில் அனுமதிக்க பல்கலைக்கழக மான்யஆணைக்குழுவின் செனட் முடிவு செய்து உள்ளது.

இவ்வருட பல்கலைக்கழக அனுமதிக்கு 20 ஆயிரம் பேர் தகுதி பெற்றிருந்தனர் என்பது தெரிந்ததே (ஒ எ)

## ஊனமுற்றோர் புனர்வாழ்வு குறித்து நேற்று மாநாடு

யாழ்ப்பாணம் ஜூன் 6

உடல் ஊனமுற்றவர்களுக்கு சமுதாய மட்டத்திலான புனர்வாழ்வு அளித்தல் பற்றிய திட்ட மாநாடு ஒன்று நேற்று யாழ். மாநகர சபையில் நடைபெற்றது.

மாநாட்டிற்கு ஆணையாளர் வி. பி. பாலசிங்கம் தலைமை தாங்கினார்.

சிறுவர் பாதுகாப்பு நிதியம், அகதிகள் புனர்வாழ்வுக் சழகம், மாநகர சபை சுகாதார வைத்திய பிரிவு ஆகியவற்றைச் சேர்ந்த பிரதிநிதிகள்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஜெரமி - புலிகள் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 6

யாழ்ப்பாணம் வந்துள்ள விவசாய அபிவிருத்தி சர்வதேச நிதியத்தின் அதிகாரியான திரு. ஜெரமி போல் நேற்று விடுதலைப் புலிகள் பிரமுகர்களைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் பத்தாண்டுகால பனை அபிவிருத்தித் திட்டம்ஒன்றை நடைமுறைப்படுத்துவது குறித்து ஆராய்வதற்காக வந்துள்ள திரு. ஜெரமி, விடுதலைப்புலிகள் மக்கள்முன்னணியின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன்பாலசிங்கம், முன்னணியைச் சேர்ந்த திரு. ரவி ஆகியோரைகோண்டாவிலில் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

பனைவளத்தை அபிவிருத்தி செய்வதற்கு முழு ஆதரவும் வழங்கத் தாம் தயாராக இருப்பதாகவும், நீண்டகாலத் திட்டம் ஒன்று வகுக்கப்படுவது பொருத்தமானது என்றும் டாக்டர் பாலசிங்கம் திரு. ஜெரமியிடம் தெரிவித்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பாடசாலை உணவு முத்திரை; கொழும்பில் தயார் நிலையில்

### யாழ். அரச அதிபருக்கு நேற்று அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 6

யாழ் - மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கான மதிய உணவு முத்திரைகள் தயாராகிவிட்டதாக கொழும்பில் இருந்து நேற்று மாலை அரச அதிபருக்குத் தகவல் வந்து சேர்ந்தது.

யாழ். மாவட்டபாடசாலைகளின் மாணவர்களுக்கு மதிய உணவுக்குப் பதிலாக உணவு முத்திரை வழங்கும் திட்டம் கடந்த மாதம் முதல் அமுல் செய்யப்பட்டிருந்தது.

உணவு முத்திரைகள் கொழும்பில் இருந்து வராததால் முத்திரை விநியோகம் மேற்கொள்ளப்பட வில்லை. என்பது தெரிந்ததே.

(ஒ-3-10)

## ★ ஆறாவது திருத்த நீக்கம்;

# ஈரோஸின் தனிநபர் பிரேரணை தாமதமாகும் என்று அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 6

அரசமைப்பின் ஆறாவது திருத்தத்தை நீக்குவதற்கான தனிநபர் பிரேரணையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதை தாங்கள் தாமதப் படுத்தியிருப்பதாக ஈரோஸின் வெகுஜன அணியான ஈழவர் ஜனநாயக முன்னணி அறிவித்திருக்கிறது.

இது தொடர்பாக அந்த முன்னணியின் பொதுச் செயலாளர் திரு. வே. பாலகுமாரன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

அரசியலமைப்பிற்கான ஆறாவது திருத்தத்தை நீக்கக் கோரும் சட்டவரைவை தனிநபர் பிரேரணையாக நாடாளுமன்றத்தில் கொண்டுவரும் முயற்சியில் நாம் தீவிரமாக ஈடுபட்டு வருவது யாவரும் அறிந்ததே.

இந்த விடயம் தொடர்பாக கடந்த 2 ஆம் திகதி ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசாவுடனும், 3ஆம் திகதி நீதி அமைச்சர் ஜனாப். ஏ. சி. எஸ். ஹமீத்துடனும் பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட்

[6ஆம் பக்கம் பார்க்க]

## தீயில் கருகி எழுவர் பலி

புதுடில்லி, ஜூன் 6

புதுடில்லியில் நேற்றுமாலை ஏற்பட்ட தீ விபத்தில் 7 பேர் கருகி இறந்தனர். ஐநூறுக்கு அதிகமான குடிசைகள் எரிந்து சாம்பராகின.

தீ விபத்துக்கான காரணம் தெரியவில்லை என்று அறிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

## கொழும்பில்

# தமிழ் எம்.பிக்கள் குடும்பங்களுடன் ஒரே அறையில் வாழும் நிலை!

### சபையில் பிரஸ்தாபம்

கொழும்பு, ஜூன் 6

வடக்கு - கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கு பாதுகாப்பு இல்லாததால் கொழும்பில் 'சிராவஸ்தியில்' ஓர் அறையில் முடங்கி வாழ வேண்டிய நிலையில் உள்ளனர். அவர்களுக்கு இருப்பிட வசதியும், பாதுகாப்பும் வழங்க அரசு முன்வரவேண்டும்.

சுதந்திரக்கட்சி எம்.பியான திரு. ரிச்சார்ட் பத்திரான நேற்று நாடாளுமன்றத்தில் பேசுகையில் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

சபையில் நேற்று மட்டக்களப்பு மாவட்ட எம்.பியான சாம் தம்பிமுத்துவின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் பிரேரணை மீதான விவாதம் நடைபெற்றது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பிரிட்டனில் இருந்து

# யாழ்.வரும் உபகரண கொள்கலன் கொழும்பில் திறக்கப்படமாட்டாது

### இலங்கை அரசு இணக்கம்

யாழ்ப்பாணம், ஜூன் 6

பிரிட்டிஷ் அரசு யாழ், பல்கலைக்கழகத்துக்கு வழங்கும் பெறுமதிவாய்ந்த ஆய்வுகூட உபகரணங்கள் கொண்ட கொள்கலன்களை கொழும்பில் திறக்கக்கூடாது என்று பிரிட்டிஷ் கவுன்சில் விதித்த உத்தரவை இலங்கை அரசு ஏற்றுக்கொண்டது.

பிரிட்டிஷ் அரசின் வெளிநாட்டு அபிவிருத்தி நிதியத்தினர் யாழ். பல்கலைக்கழகத்துக்கு வழங்கிய பலகோடி ரூபா பெறுமதியான ஆய்வு கூட உபகரணங்கள் கொழும்புக்குக் கொண்டுவர இருக்கின்றன.

அவை அப்படியே ரயில் மூலம் இங்கு கொண்டுவரப்பட்டு சுங்க அதிகாரிகளால் பரிசோதனை செய்யப்பட்டு வழங்கப்படும்.

இந்தக்கொள்கலன்களைபல்கலைக்கழகத்துக்கு கொண்டு செல்லக்கூடிய பாரிய வாகனங்கள் கொழும்பில் இருந்து கொண்டுவரப்பட இருக்கின்றன.

இந்த உபகரணங்கள் இம் மாத இறுதிக்குள் இங்கு வந்து சேரவுள்ளன.

[ஒ-3-10]

## பத்மநாபா மீது பிடியாணை

கொழும்பு, ஜூன் 6

அரசுக்கு எதிரான சதிமுயற்சி வழக்கு ஒன்றில் எதிரியாக உள்ள ஈ. பி ஆர். எல் எப் இயக்க செயலதிபர் சே.பத்மநாபாமீது கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று முன்தினம் பிடியாணை பிறப்பித்தது.

இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது திரு. பத்மநாபா சார்பில் சட்டத்தரணி எவரும் ஆஜராகவில்லை.

இதைத் தொடர்ந்து பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

இதற்கு முன்னரும் திரு. பத்மநாபாவுக்கு எதிராக பிடியாணை வடக்கு - கிழக்கு பிரதிப் பொலீஸ் மாஅதிபர் மூலம் அனுப்பி வைக்கப்பட்டது.

இது சம்பந்தமாக பிரதிப் பொலீஸ்மா அதிபர் அறிக்கை ஒன்றைத் தபால் மூலம் நீதிமன்றத்துக்கு அனுப்பி வைத்திருந்தார். (இ-எ)

### சுப நேரம்

06 - 6 - 90

புதன்கிழமை வைகாசி 23

சுபநேரம்!
04.22 - 05.52

இராகுகாலம்
11.52 - 1.22

## பிரான்ஸிலிருந்து

# நாடு கடத்தப்பட்ட அகதிகள் கல்கத்தா விமான நிலையத்தில்

கல்கத்தா ஜூன் 6

பிரான்ஸில் இருந்து நாடு கடத்தப்பட்ட இலங்கை தமிழ் அகதிகள் குழு ஒன்று கல்கத்தா சர்வதேச விமான நிலைய வளவில் முகாமிட்டுள்ளது.

தமிழ் நாட்டுக்குத் தங்களை இலவசமாகத் திருப்பி அனுப்பி வைக்க வேண்டும் என்று கோரியே அவர்கள் முகாமிட்டுள்ளனர் என்று ஏஜன்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

சென்ற 31ஆம் திகதி இவர்கள் கல்கத்தா விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

எயர்லைன் அதிகாரிகள் சிலரின் நிதி உதவியைப் பெற்றுக் கொண்டு 18 அகதிகள் அங்கு தங்கியுள்ளனர்.

இவர்கள் அனைவரும் பாரிஸில் இருந்து எரோபுளோட் விமானத்தில் கல்கத்தாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

கல்கத்தாவில் இவர்கள் தங்குவதற்கு மேற்கு வங்காள அரசு மறுத்து விட்டது.

''ரயில் மூலம் சென்னை செல்வதற்கு டிக்கட் வாங்கித் தரும்படி நாம் மாநில அரசைக் கேட்டுள்ளோம்'' — என்று அகதிகளில் ஒருவரான வரதராஜன் ரத்தினம் (45 வயது) தெரிவித்தார்.

'ஆனால் மாநில அரசு எம்மீது அனுதாபம் கொள்ளாது நடுத்தெருவில் விட்டு விட்டது என்றும் அவர் சொன்னார்.

'போட்டிக் கெரில்லாக்குழுக்களுடன் எங்களுக்குத் தொடர்பு இருந்தது. விடு

(5 ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி முரளி



இலங்கை அரசின்ரை 'சுத்து மாத்துக்கள்' பிரிட்டிஷ் அதிகாரியளுக்கு விளங்கிட்டுது எண்டு சொல்லுங்கோ பிள்ளை....'!



இன்று முதல்
(06-06-90)
24மணி நேர சேவை
ஆரம்பமாகின்றது
உள்நாட்டு வெளிநாட்டு
துரித தொலைத்
தொடர்பு சேவை

யாழ். லிங்க்
கொம்யூனிகேஷன்

— யாழ் பஸ் நிலையம் முன்பாக —

இன்று முதல்
உலகின் எப்பகுதிக்கும்
★ டெலக்ஸ் ★ ஃபாக்ஸ்
★ உள்நாட்டு, வெளிநாட்டு தொலைத் தொடர்பு வசதிகளை எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்
★ முத்திரை விற்பனை
★ போட்டோ பிரதி என்பனவும் செய்து கொடுக்கப்படும்.

அன்பர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள்
அனைவரையும் இத்திறப்பு விழாவிற்கு
அன்புடன் அழைக்கின்றோம்.

யாழ்.லிங்க் கொம்யூனிகேஷன்
404 1/2, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(டில்கா மேல்மாடி)

[சி-4709]

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறுவிளம்பரம்

## விற்பனைக்கு

ஒல்லாந்திலிருந்து இறக்குமதி செய்த (Crimsonglobe) பீற்றூட் விதை விவசாய ஆய்வுகூட அனுமதிபெற்றது. உயர் விளைச்சல் தரவல்லது. 200 கிறாம் டின் ரூ 150 00 தேவைக்கு: பிள்ளையார், 259, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (3736)

## காணி விற்பனைக்கு

நல்லூர் செம்மணி வீதி ஒரம் கல்வித்திணைக்களத்திற்கு முன்பாக தென்னைகள், மாக்கள் உள்ளடக்கிய 3½ பரப்பு காணி உடன் விற்பனைக்கு உண்டு தொடர்பு இல. 712 C/O உதயன். (3746)

## தவறி விட்டது

3 6-90 ஞாயிற்றுக்கிழமை கறுத்த நிற பேசுடன் ஏறக்குறைய 5,000 ரூபா பணம் நாவாந்துறை சைக்கிள் பாதுகாப்பு நிலையத்திற்கும், பெரிய கடைக்கும் இடையில் தவறி விட்டது. எடுத்தவர்கள் 74/1, கஸ்தூரியார் வீதி, நியூலலிதா ஜுவலர்ஸ், P. நடேசன் என்பவரிடம் ஒப்படைக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம். (3762)

## மணமகள் தேவை

இந்து வேளாள குலத்தைச் சேர்ந்தயாழ். வங்கியில் உத்தியோகத்தராகக் கடமையாற்றும் லக்கினத்தில் செவ்வாய் உள்ள 31 வயது மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை. புகைப்படத்துடனும் விபரங்களுடனும் விண்ணப்பிக்கவும் யாழ்ப்பாணத்தில் வீடு இருப்பின் நன்று. வி. இல. 139 மே/பா உதயன் யாழ்ப்பாணம். (13339)

## WANTED

An enterprising young Lady Assistant is wanted for an educational institution. Knowledge of typing is an added qualification Selection after an interview Salary negotiable. Please apply giving details of educational qualifications and other claims to:- No. 711, C/o Uthayan. Closing date 26-06-1990. (3747)

## மணமகன் தேவை

இந்து, வேளாள, 28 வயதுடைய கொழும்பில் பொறியியலாளராகக் கடமைபுரியும் அழகிய பெண்ணிற்கு மணமகன் தேவை. பொறியியலாளரை விடக் குறைந்த தகுதியுடையவர்களும் விண்ணப்பிக்கலாம். சீதனம் வழங்கப்படும். இல. 719, C/o உதயன். (3760)

வடமராட்சி இந்து பள்ளர் குலப் பெற்றோர் தமது 28 வயது நிரம்பிய 1 இல் செவ்வாய் தோஷமுள்ள B A பட்டதாரி ஆசிரியை மகளுக்கு மணமகனை தேடுகிறார்கள். ஆசிரியர், வங்கி, அரசாங்க உத்தியோகத்தர் விரும்பத்தக்கது சீதனம் பேசித் தீர்மானிக்கப்படும். சகல விபரங்களுடன் தொடர்பு. இல. 714 C/O உதயன். (3749)

## போட்டோஸ்ரட்

உங்கள் தேவைக்கேற்ப சிறியதை பெரிதாக்கியும் பெரியதை சிறிதாக்கியும் கொடுப்பதில் தரமான பிரதிகளை வேண்டிய அளவுகளில் ஒரு நிமிடத்தில் செய்து கொள்ள நாடுங்கள் பிக்பென்ஸ் " B ", கண்டிவீதி, கிளிநொச்சி சிங்கர் கொம்பனி முன்பாக. (13184)

## சோதிட மாந்திரீக நிபுணர்

நினைத்த காரியம், ஜாதக பலன், விவாகப் பொருத்தம், எண்சோதிடம், தொழில் விருத்தி, மங்கள மணவாழ்வு மனையில் இலட்சுமி கடாட்சம், சத்துருஜெயம், கிரக தாஷம், முதலான மாந்திரீக விடயங்கட்கும் நாடுங்கள் ' சக்தி சரவணா ' (அரச அங்கீகாரம் பெற்ற சோதிடரும், மட்டக்களப்பு பாரம்பரிய பரம்பரை மாந்திரீக நிபுணரும்) 210, கஸ்தூரியார் வீதி, [யாழ்/ இந்துக் கல்லூரி மைதானத்திற்கு முன்பாக] யாழ்ப்பாணம். வியாழக்கிழமை விடுமுறை. [3751]

## கோழிக்குஞ்சு விநியோகம் (Uplands Farm)

கறுப்பு (வரி) (பிலிமத்) சேவல்குஞ்சுகள் வான்கோழிக் குஞ்சுகள் 5- 6- 90 , 6- 6-90 திகதிகளில் விநியோகிக்கப்படும். இல-9 கந்தையா ஒழுங்கை சுன்னாகம் [புகையிரத நிலையத்துக்கு அருகில்] (3754)

## காசாளர் தேவை

இல. 650, ஆஸ்பத்திரி வீதி இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் முன்பாக அமைந்துள்ள நிறுவை அளவை விற்பனை நிலையத்திற்கு பெண் பில் கிளார்க்/ காசாளர் தேவை. வியாழன் (7-6-90) காலை 10 மணிக்கும் 12 மணிக்கும் இடையில் நேரில் வரவும். (3761)

## புலமைப்பரிசில் பரீட்சை [ஆண்டு 5]

கடந்த வருடம் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற எமது நிறுவனத்தால் நடாத்தப்படும் புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை [ஆறாவது] 07-06-90 வியாழக் கிழமை மு ப 8. 00 / 10.30, பி. ப 1 00 / 3 30 மணி நேரங்களில் நடைபெறும் பதிவு செய்யவும் புதிய கல்வி நிலையம், கெங்காதரன் ஆஸ்பத்திரியடி வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (3742)

---

## தேவை

யாழ். நகரிலுள்ள பிரபல நுண்கலை நிறுவனமொன்றிற்கு தரம் 1 இலிருந்து ஆசிரியர் தரம்வரை பரத நாட்டியம், வாய்ப்பாட்டு பயிற்றுவிப்பதற்குரிய தகமையுள்ள ஆசிரியைகள் தேவை.

**விண்ணப்பிக்குக:**

இல. 721, மே/பா உதயன்
யாழ்ப்பாணம்.

(C/4710)

---

# *Vacancy in Libya*

## Computer Operator - Salary - LD 120

Fluent in English and Typing skills, more than two years experience with the MS – DOS operating system (IBM Compatibles), Word processing and spreadsheet. Knowledge of supercal, Multimate, Symphony would be considered an advantage.

## Accounts / Costing Clerk - Salary - LD 110

Fluent in English, General accounting knowledge, preparing schedules for expense analysis, debtors and creditors, reconcilistions, Etc.,

I LD = US $ 3.3

CONDITIONS OF SERVICE:

**Age 25 — 45 years. Two years contract. Mess facilities, lodging, medical free**

**Please call over immediately at 18 1/4, Mudalige Mawatha.**
(off York Street) with documents. Urgent.

**Indranee Agency**
Licence No. 616
நெல்லியடி, கரவெட்டி.

[3806]

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



திருமதி
## வள்ளியம்மை சுப்பிரமணியம்

தோற்றம்: 15 – 05 – 1927 மறைவு: 08 – 05 – 1990

அன்பின் திருவுருவாய், பண்பின் பிறப்பிடமாய், பாசத்தின் சிகரமாய், சுயமரியாதைக் கொள்கையின் சுடர்விளக்காய் வாழ்ந்து எங்கள் அனைவருக்கும் வழிகாட்டியாய் குடும்பத்தை வழி நடத்தி அரும்பணியாற்றிய எங்கள் அன்புத் தெய்வமே! நீர் திடீரெனப் பிரிந்து எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்ட உன் நினைவும், பாசமும் எம்மை விட்டு அகலாது நிலைத்திருக்கும்.

07-06-1990 இல் நடைபெறும் அந்தியேட்டி கிரியைகளில் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டும்.

உங்கள் பிரிவால் வாடும்;

**அன்புக் கணவர், மகள், மகன், சகோதரர்கள், மருமகன், பேரப்பிள்ளைகள், பெறாமக்கள், உற்றார், உறவினர்.**

65, மூத்தவிநாயகர் வீதி.
நல்லூர், யாழ்ப்பாணம். (13341)

---

# ★ கம்பியூட்டர் கல்வி ★

★ **dBASE III Plus**
ஆரம்பம்: 07 – June – 1990 10.30 a. m.

★ **LOTUS 123**
ஆரம்பம்: 07 – June – 1990 9.00 a. m.

★ **WORD PROCESSING**
ஆரம்பம்: 09 – June – 1990 4.00 p. m.

**Join with us to Study the Latest Computer Technology**

# UNIKCO Computer Centre

**No. 5, Power House Road, 2nd, Lane, Jaffna.**

[சி-4646]

---

# விவசாயிகளே!

# வெங்காயப் பயிரில் களைகளின் தாக்கமா?

# கோல் 2 ஈ

★ போட்டி இட்டு வளரும் சகல களைகளையும் விதைகள் முளைக்க முன் அழிக்கவல்லது.

★ இரண்டு மாதங்களுக்கு மேல் களைகளில் இருந்து பாதுகாப்பு

★ பரந்த செயற்பாடுடைய ஒரே களை நாசினி

விவசாய இரசாயனங்கள் அபாயகரமானவை
அவதானமாகக் கையாளவும்.

CIC

# கெமிக்கல் இன்டஸ்றீஸ் (கொழும்பு) லிமிட்டெட்

த. பெ. எண் 352, கொழும்பு.

---

காய்கறிகளில் **ஒலலகொபோறா** வண்டையும்
நிலக்கடலையில் இலை அரிபுழுவையும்,
மரமுந்திரிகையில் தண்டு, வேர் துளைப்பானையும்
கட்டுப்படுத்த சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

# தயோடான் 35% EC

(ENDOSULFAN 35% EC எண்டோசல்பன் 35 % EC)

**வெங்காயதாள் கோதிப் புழுவை முற்றாக அழிக்க பாவியுங்கள்!**

# டெசிஸ் 25% EC

(DELTAMETHRIN 25% EC டெல்டா மெத்திரின் 25% EC)

LANKEM
ලංකෙම් லங்கெம்

லங்கெம் விவசாயிகளின் தோழன்!!

★ பீடை நாசினிகள் அபாயகரமானவை. அவதானமாக பாவிக்கவும் ★

# லங்கெம் சிலோன் லிமிட்டெட்

760, 762, பேஸ்லைன் வீதி,
**கொழும்பு - 9.**
தொலைபேசி: 698292 - 6

[சி-4637]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**
தாம்வேண்டின் நல்குவர் காதலர் யாம்வேண்டும்
கௌவை எடுக்கும் இவ்வூர்.

**பொருள்:**
யாம் விரும்புகின்ற அலரை இவ்வூரார் எடுத்துக் கூறுகின்றனர்; அதனால் இனிமேல் காதலர் விரும்பினால் விரும்பியவாறு அதனை உதவுவார்.


# உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 2288
06 - 06 - 1990 த. பெ இலக்கம் 25


## குடியேறுவோருக்கு உதவுக !

**யாழ்** மாவட்டத்தில் 14 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் இருக்கின்றன. அவற்றில் இரண்டில் அதாவது ஊர்காவற்றுறை, பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் காணி அற்றோருக்கு அரசு காணிகளைப் பகிர்ந்தளிக்கும் வேலைகள் ஏற்கனவே பூர்த்தி அடைந்து விட்டன.

வேலணை, தெல்லிப்பழை, சாவகச்சேரி, மருதங்கேணி ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் காணிக் கச்சேரிகள் நடத்தப்பட்டு காணி அற்றோருக்கு காணி வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மற்றும் தீவுப்பகுதி தவிர்ந்த யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய், உடுவில், சங்கானை, சண்டிலிப்பாய், கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் அரச காணிகள் இல்லை.

இந்த உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் உள்ள காணி அற்றோருக்குக் காணி பெற்றுக்கொடுக்கும் பாரிய பொறுப்பு அரசாங்க அதிபர் மீது சுமத்தப்பட்டிருக்கிறது. இதற்கான மாற்றுத்திட்டமும் வகுக்கப்பட்டுவிட்டது. இவர்களை யாழ் மாவட்டத்துக்கு வெளியே உள்ள கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் குடியேற்றுவதே இத்திட்டம் ஆகும்,

யாழ். அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் மற்றும் காணித் திணைக்கள அதிகாரிகள் இதில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த முயற்சிக்கு மாகாண அரசின் ஒத்துழைப்பு அவசியம். அதே போன்று பொதுமக்களின் ஒத்துழைப்பும் தேவை.

மக்கள் குடாநாட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடக்கும் நிலை மாறவேண்டும். காடுகளைக் களனிகளாக்கி விவசாயத்துறையை அபிவிருத்தி செய்து பொருளாதார அபிவிருத்தி காணவேண்டும்.

வடக்கு - கிழக்கு மாகாண அரசாங்க அதிபர்கள் மாநாடு எதிர்வரும் எட்டாம் திகதி மட்டக்களப்பில் நடைபெறுகிறது.

யாழ். அரச அதிபரின் முயற்சிக்கு மாகாண அரசு முழு அளவில் ஒத்துழைப்பு வழங்கினாலேயே இத் திட்டத்தை வெற்றிகரமாகச் செயற்படுத்த முடியும்.

வடக்கு - கிழக்கு எல்லைப்புற மாகாணங்களில் இருந்து வெளியேறிய சுமார் 6 ஆயிரம் சிங்களக் குடும்பங்களில் நாலாயிரம் குடும்பங்கள் குடியேற மறுப்புத் தெரிவித்துள்ளன. சிங்கள மாவட்டங்களில் உள்ள அரச காணிகளில் இக் குடும்பங்களைக் குடியேற்ற அரசு முடிவு செய்துள்ளது. அத்துடன் ஒவ்வொருகுடும்பத்துக்கும் 4 ஆயிரம் ரூபாவிசேஷ கொடுப்பனவும் வீடு கட்டிக் கொள்ள 15 ஆயிரம் ரூபா முதல் ஒன்றரைலட்சம் ரூபா வரையிலான கடனுதவியும் வழங்க முடிவாகி இருக்கிறது.

இவர்களுக்கு வழங்கப்படுவது போன்ற ஊக்குவிப்புகள் யாழ். குடாநாட்டுக்கு வெளியே சென்று குடியேறுபவர்களுக்கும் வழங்கப்பட வேண்டும்.

கடந்த காலங்களிலும் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த ஆயிரக்கணக்கானோர் பரந்தன், கிளிநொச்சி, வவுனியா போன்ற இடங்களில் அரச காணிகளைப் பெற்றிருந்தனர். ஆனால் அவர்களுக்குப் போதிய உதவிகள் வழங்கப்படவில்லை. காடுகளை அழிப்பதற்கே பணம் இல்லாத நிலையில் பலர் தமது காணிகளைக் கைவிட்டிருந்தனர்.

இந்த நிலை யாழ். மாவட்டத்தில் இருந்து சென்று குடியேறுவோருக்கு ஏற்படக்கூடாது.

## கண், செவிப்புல சாதனை கண்காட்சி

மானிப்பாய் ஜூன் 6

''கட்புல, செவிப்புல சாதனங்களை கண்ணால்பார்த்து, காதால் கேட்டு அவற்றை உணர்ந்து ஜீரணிக்கக் கூடிய ஒரு தன்மையை இன்றைய சங்கீத நடன ஆசிரியர் ஒன்றியத்தின் இக்கண்காட்சி எடுத்துக் காட்டுகின்றது''

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி இசை நடன ஆசிரியர் ஒன்றியத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட கட்புல செவிப்புல சாதனக்கண்காட்சியை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய மருதனார்மடம் உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. க. குலசேகரன் இவ்வாறு கூறினார்.

சங்கீதத்துக்குத் தனியாகவும், நடனத்துக்குத் தனியாகவும் அமைக்கப்பட்டிருந்த இக்கண்காட்சியை உதவிக்கல்விப்பணிப்பாளர் நாடா வெட்டி திறந்து வைத்தார். மருதனார்மட கோட்டக் கல்வி அதிகாரி திரு. எஸ். ரட்ணராசா கண்காட்சியின் போது மங்கள விளக்கேற்றி வைத்தார்.

திரு குலசேகரன் மேலும் கூறியதாவது; இக்கண்காட்சியையொட்டி ஆண்டு ஆறு முதல் 11 வரையான சங்கீத நடன பாட அலகுகளை முழுமையாக்கி அதனை து செயல் வடிவிலும் அமைத்தச்துள்ளது ஓர் விசேடமாகும். இதனை ஒழுங்கு படுத்திய ஆசிரியர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள். கண்காட்சி நடந்து கொண்டிருக்கும் போதே இங்கு கடமையாற்றும் கலைஞர்களான ஆசிரியர்கள் இசையை வழங்கிக் கொண்டிருப்பதும் மிகப் பொருத்தமாக அமைந்துள்ளது என்றார்.

இப்படி அவர் கூறினார்.

## மன்னார்-யாழ் நேரடி பஸ் சேவை நிறுத்தப்படலாம்

மன்னார் -யாழ் நேரடிப் பஸ் சேவை அடுத்த சிலதினங்களில் நிறுத்தப்படலாம்எனத் தெரிய வருகிறது.

பிரஸ்தாப பஸ் சேவை கேரதீவு- சங்குப்பிட்டி ஊடாக நடைபெற்று வந்தது. ஆனால் அண்மையில் கேரதீவு- சங்குப்பிட்டி பாதையில் கனரக வாகனங்கள் ஏற்றுவதுஇடை நிறுத்தப்பட்டது.

இதனை அடுத்து மன்னார் யாழ் பஸ்சேவை பரந்தன்- பூநகரி ஊடாக நடைபெற்று வந்தது.

தற்பொழுது இந்த சேவையை நிறுத்திவிட்டு யாழ்ப்பாணத்திலிருந்து கேரதீவுவரையும், மன்னாரிலிருந்து சங்குப்பிட்டி வரையும் தனித்தனியாக யாழ் டிப்போ, பஸ்களும், மன்னார் டிப்போ பஸ்களும் சேவையாற்றுவது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது. (இ-9)

யாழ் மாவட்டத்தில்

# 7 உதவி அரச அதிபர் பிரிவுகளில் அரச காணி இல்லை!

## மாற்றீடாக வெளிமாவட்டத்தில் காணி பெற மாநாட்டில் முடிவு

யாழ்ப்பாணம், ஜூன் 6

யாழ். மாவட்டத்தில் ஏழு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் அரச காணிகள் இல்லை. இப்பிரிவுகளைச் சேர்ந்த காணி அற்றவர்களை கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள அரச காணிகளில் குடியேற்றுவதென்று யாழ் செயலகத்தில் நடைபெற்ற மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் காணி அற்றவர்களுக்கு காணி வழங்குவது சம்பந்தமாக நேற்று முன்தினம் யாழ் அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் தலைமையில் இந்த மாநாடு நடைபெற்றது.

மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு;

★ யாழ். மாவட்டத்தில் சங்கானை, சண்டிலிப்பாய், யாழ்ப்பாணம், நல்லூர், உடுவில், சரவெட்டி, கோப்பாய் ஆகிய ஏழு உதவி அரசாங்க பிரிவுகளில் அரச காணிகள் இல்லாததால் அப்பகுதிகளைச் சேர்ந்த காணியற்றவர்களுக்கு முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் காணி பெற்றுக் கொடுக்க அரச அதிபர் எதிர்வரும் எட்டாம் திகதி மட்டக்களப்பில் நடைபெறும் மாநாட்டில் கோரிக்கை விடுக்க வேண்டும்.

★ அரச திணைக்களங்களுக்கு வழங்கப்பட்டு, பாவிக்கப்படாமல் இருக்கும் காணிகளைச் சுவிகரித்து வேறு திணைக்கள கட்டடம் அமைக்கவும், காணியற்ற மக்களுக்கு வீடு அமைக்கவும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். (இ-3)

## மதிய உணவு முத்திரை: இவர்களுக்கு முந்திக் கிடைக்கும்

யாழ். மாவட்டத்தில் யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள பாடசாலைகளுக்கு முதலில் மதிய உணவு முத்திரைகள் கிடைக்கவுள்ளன.

உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் தோறும்பாடசாலை மாணவர்களது விவரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன.

எனினும் யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படவேண்டிய முத்திரை விவரங்கள் உடனடியாக யாழ். உதவி அரசாங்க அதிபருக்கு கிடைத்ததை அடுத்து இதன் விவரம் அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவு பாடசாலைகளின் விபரங்கள் முந்தி அனுப்பப்பட்டதால் - அந்தப்பிரிவுக்கேமுதலில்மதிய உணவு முத்திரைகள் வழங்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. [ஒ-10]

பருத்தித்துறை, ஊர்காவற்றுறைப் பகுதிகளில்

## காணியற்ற 572 பேருக்கு காணிகள் பகிர்ந்தளிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 6

யாழ். மாவட்டத்தில் காணி அற்றவர்களுக்கு ஜனாதிபதி பிரேமதாஸாவின் காணி பகிர்ந்தளிக்கும் திட்டத்தின் கீழ் பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 479 பேருக்கும், ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 93 பேருக்குமாக மொத்தம் 572 பேருக்குகாணிகள் வழங்கப்பட்டன.

பருத்தித்துறை, ஊர்காவற்றுறை, மருதங்கேணி, சாவகச்சேரி, தெல்லிப்பளை, வேலணை ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் உள்ள அரச காணிகளை காணியற்றவர்களுக்கு பகிர்ந்தளிக்க காணிக்கச்சேரிகள் நடைபெற்றன.

பருத்தித்துறை, ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைத் தவிர்ந்த ஏனைய நான்கு உதவி அரசாங்க பிரிவுகளிலும் இம்மாத இறுதிக்குள் காணி வழங்கி முடிக்க வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. (ஓ-3)

## தீவுப்பகுதி போக்குவரத்துக்கு மற்றும் ஒரு படகு வருகிறது

யாழ்ப்பாணம், ஜூன் 6

தீவுப்பகுதி போக்குவரத்துக்கு மேலும் ஒரு படகு விரைவில் வந்துசேரும்.

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் 25 லட்சம் ரூபா செலவில் கொழும்பு டொக்கியாட்டினால் கட்டப்பட்ட பிரஸ்தாப படகு வடபகுதிக்கு எடுத்துவரப்பட்டு வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் ஒப்படைக்கப்படும்.

படகு வந்துசேர்ந்ததும் முதலில் நயினாதீவு உற்சவத்துக்காக சேவையிலீடுபடுத்தப்படும்.

பின்னர் தீவுப்பகுதியில் சேவையிலீடுபடுத்தப்படும். [இ-9]

சொக்கனின் ஆக்கங்கள்

# பல்கலைக்கழக மட்டத்தில் ஆய்வு செய்யப்பட வேண்டும்

## மணிவிழாவில் கலாநிதி மோகனதாஸ் உரை

யாழ்ப்பாணம் ஜூன் 6

''வித்துவான் சொக்கன் பல கோணங்களில் இருந்து தமது படைப்புக்களை எமக்குத் தந்துள்ளார். அந்த ஆக்கங்கள் பல்கலைக்கழக மட்டத்திலும், இலக்கிய மட்டத்திலும் ஆய்வு செய்யப்பட வேண்டும். அதன் மூலம் அவரது கருத்துக்கள் எதிர்கால சந்ததிக்கு பயன்பட உதவ வேண்டும்.''

இப்படிக் கூறினார் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி சு. மோகனதாஸ்.

வித்துவான் சொக்கனின் அறுபதாண்டு மணிவிழாவில் கலந்து பேசுகையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ். நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலையில் மணிவிழாச்சபைத்தலைவர் திரு தி. கமலநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் நல்லை ஆதின கர்த்தா ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்கினார். அவர் தமது உரையில் இன்று தச்சார் ஒருவருக்கு விழா எடுக்கப் படுவது பாராட்டப்பட வேண்டும். பல்துறைகளிலும் பாண்டித்தியம்பெற்ற ஒருவரைப்பாராட்டிக் கௌரவிக்கும் தமிழன் பண்பாட்டுக்கு ஏற்றவாறு இன்று இவர் கௌரவிக்கப்படுகிறார். இவர் பணி மேலும் விரிவு பட இந்த விழா ஊன்றுகோலாக அமையும் என்றார்.

மணிவிழா மலரை அறிமுகம் செய்து வைத்துப் பேசிய யப்பான் கச்சியின் பல்கலைக்கழக விரிவுரையாளர் திருமதி மனோன்மணி சண்முகதாஸ் பேசுகையில் கூறியதாவது:-

இந்த அறுபது வருட காலம் சொக்கன் இலக்கியத் துறைக்கு ஆற்றிய பணியை எடுத்து எதிர்கால சந்ததிக்கு காட்டும் வகையில் நூல் அமைந்துள்ளது.

மலரில் அமைந்துள்ள 10 கட்டுரைகளும் அவர் பற்றி பத்திரிகைகளில் வெளியான அறிஞர்கள் கருத்துக்களும் இடம்பெற்றிருக்கின்றன என்றார்.

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி பேசுகையில், சமயத்துறையிலும் இலக்கியத்துறையிலும் கால் நூற்றாண்டுக்கு மேல் பணியாற்றியவர் சொக்கன். பேச்சாற்றலும், எழுத்தாற்றலும் நிரம்பப்பெற்ற அவர் பல மேடைகளிலும் தனது திறமையை வெளிக்காட்டியவர்' என்றார்.

யாழ். கோட்டக் கல்வி அலுவலக உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. தியாகராசா, சம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ். நாயன்மார்கட்டு அதிபர் திரு. சி. மு. கந்தையா ஆகியோரின் வாழ்த்துரைகள் இடம் பெற்றன.

மணிவிழா மலரை திரு. இ. ச. வரதராசனும், சொக்கனின் மாருதப்புரவல்லி என்னும் நாடக நூலை பேராசிரியர் சி. சிவஞானசுந்தரமும் வெளியிட்டு வைத்தனர். நாடக நூலை விரிவுரையாளர் குழந்தை ம. சண்முகலிங்கம் ஆய்வுரை செய்தார். (இ-3-10)

## விற்பனை ஒப்பந்த உறுதிகள்

முல்லைத்தீவு செல்வபுரம் வீடமைப்புத் திட்டத்திலுள்ள 20 வீட்டு உரிமையாளர்களுக்கும் விற்பனை ஒப்பந்த உறுதிகள் வைபவரீதியாக வழங்கப்பட்டன.

இந்த விற்பனை ஒப்பந்த உறுதியின்படி ஒவ்வொன்றும் ரூபா 18000/- பெறுமதியுடையது. இப்பெறுமதித் தொகையை மாதம் 75 ரூபா வீதம் 01- 02 2002 ஆம் திகதிக்கு முன் கட்டிமுடித்தால் அறுதி உறுதி வழங்கப்படும். அதற்கு முன் முழுத்தொகையையும் செலுத்தினால், செலுத்துபவர்களுக்கு குறிப்பிட்ட ஒரு தொகை கழிக்கப்பட்டு அறுதிஉறுதிவழங்கப்படும். (இ-92)

தும்பு ஏற்றுமதி வரி

## இடைநிறுத்தம்

தும்பு மீதான 15சத வீத ஏற்றுமதி வரி இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் அடுத்த மூன்று மாதகாலத்துக்கு இடைநிறுத்தி வைக்கப்படுகிறது.

நிதி அமைச்சு இதனை உத்தியோகபூர்வமாக அறிவித்தது [இ-எ]

மட்டக்களப்பு:

## ஆசிரியருக்கான 2 வருட கடன் மாதம் 30 பேருக்கு மட்டுமே!

மட்டக்களப்பு ஜூன் 6

மட்டக்களப்பு மாவட்ட பாடசாலை ஆசிரியர்களுக்கு இரண்டு வருட சம்பள முற்பணம் மாதம் 30 பேர் என்ற அடிப்படையில் வழங்கப்படுகிறது.

இத்தகவலை மாவட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. கே. சோமசுந்தரம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் ஏற்கனவே கடன் பெற்றவர்களிடம் இருந்து அறவிடப்படும் நிதி மூலமே இக்கடன் வழங்கப்பட்டு வருகிறது.

இக்கடன் பெற 155 பேரின் விண்ணப்பங்கள் இதுவரை சிபார்சு செய்யப்பட்டுள்ளன. இதேபோன்று 6 மாத சஷ்டநிவாரண உதவிப்பணம் மாதம் 50 பேர் என்ற அடிப்படையில் வழங்கப்படுவதாகவும் கூறினார்.

## சமய சந்நிதிகள்

### சுன்னாகம் புனித அந்தோனியார் உற்சவம்

மயிலணி ஜூன் 6

சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலய நவநாள் விழாக்கள் நேற்றுமுன்தினம் மாலை 4. மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளன.

தினமும் 5. 30 மணிக்கு நவநாள் வழிபாடுகளும் 12ம் திகதி நற்கருணை வழிபாடும் 13ஆம் திகதி காலை 7. 30 மணிக்கு புனிதரின் திருநாட் திருப்பலியுடன் விழாக்கள் நிறைவு பெற உள்ளது. நவநாள் வழிபாடுகளைப் பங்குத் தந்தை அருட்திரு லூயிஸ் மொன்டேட் அடிகள்நடாத்துவார். (-89)

### வேலணையில் சப்பறம் வெள்ளோட்டம்

யாழ்ப்பாணம் ஜூன் 6

வேலணை மேற்கு பெரிய புலம் மஹா கணபதிப்பிள்ளையார் (முடிப்பிள்ளையார்) ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட சப்பறத்தின் வெள்ளோட்டம் இன்று புதன் கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறும்.

நாளை வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்த உற்சவமும்நடைபெற இருக்கின்றது. (இ-3)

### தீர்த்தோற்சவம்

வட்டுக்கோட்டை ஜூன் 6

வட்டுக்கோட்டை மேற்கில்உள்ள ''சின்னக் கதிர் காமம்'' [சுப்பிரமணிய [கோவில்] தீர்த்தோற்சவமும் அன்னதானமும் இன்று புதன் கிழமை நடைபெறறும். [இ-116]

## திருவாசகம் முற்றோதல்

யாழ்ப்பாணம் ஜூன் 6

ஏழாலை இலந்தை கட்டி ஸ்ரீ பாதாள ஞான வைரவர் ஆலயத்தில் இன்று புதன் கிழமை காலை 6.30 மணிக்கு ஓதுவார் திரு. அ. காசிப்பிள்ளையினால் திருவாசாம் முற்றும் ஓதல் இடம் பெறும்.

இதனைத் தொடர்ந்து மாலை மூன்று மணிக்கு ஏழாலை ஸ்ரீ பாதாள ஞான வைரவர் கோவில் பரிபாலன சபையும், இந்து இளைஞர் மன்றமும் இணைந்து ஆத்ம ஜோதி ஆசிரியர் நா. முத்தையாவின் ஜெயந்தி தினத்தை கொண்டாட உள்ளன. (இ)

## சுங்கதிணைக்கள வெற்றிடம்

யாழ்ப்பாணம், ஜூன் 6

சுங்கத் திணைக்களத்தில் உள்ள வெற்றிடங்களை நிரப்ப போட்டிப் பரீட்சை ஒன்று நடத்தப்படவிருக்கிறது.

போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் அரசாங்க ஊழியரிடமிருந்து கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்கள் இம்மாதம் 15ஆம் திகதிக்கு முன்பதாக அனுப்பப்பட வேண்டும்.

இதற்கான விண்ணப்பப் படிவங்கள் யாழ் - செயலகத்தில் விநியோகிக்கப்படுகின்றன. (இ-3)

## வாசகர் திருமுகம்

### நியாயம் வழங்குக

தமிழ்த்தினப் போட்டி சம்பந்தமாக நடத்தப்பட்ட இசைப் போட்டிகளில் தனிநபர் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டிருந்தது.

தனிநபர் பிரிவில் யாழ் மாவட்டத்தில் முதலாவது இடம்பெற்ற சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவி திருகோணமலையில் மாகாண மட்டத்தில் இம்மாதம் 2 ஆம் திகதி நடந்த போட்டிக்கு அழைக்கப்பட்டிருந்தார். அங்கும் தனிநபர் பிரிவில் அந்த மாணவியே முதலிடம் பெற்றார்.

ஆனால் நடுவர்கள் தனிநபர் பிரிவையும், குழுப்பாடகர் பிரிவையும் ஒன்றாக ஒத்துப் பார்த்து குழுப்பாடகர்களுக்கு முதலிடம் வழங்கி, தனிநபர் பாடலில் முதலிடம் பெற்றவரை இரண்டாவது இடத்துக்குத் தள்ளி விட்டனர்.

தனிநபர் பிரிவும், குழுப் பாடகர் பிரிவும் சேர்க்கப்பட்டு இறுதிப் பரிசு வழங்கப்படும் என்று முன்னறிவிப்பு இல்லாமல், நடுவர் குழு தாம் நினைத்தமாதிரி இரண்டையும் சேர்த்து, ஒத்துப் பார்த்தது முறையல்ல.

இது குறித்து சம்பந்தப்பட்டவர்களிடம் முறையிட்டும் பயனில்லை. இது விடயமாக மேலிடம் மீள் பரிசீலனை செய்து பரிசளிப்பு விழா இம்மாதம் 15ஆம் திகதி நடப்பதற்கு முன்னர் நியாயம் வழங்க வேண்டும்.

டாக்டர் வி. சபாரத்தினம்
மூளாய் வீதி,
வட்டுக்கோட்டை.

### எமது பிரச்சினையை யார் தீர்ப்பது?

அண்மைக்கால உதயன் இதழொன்றில் கல்லூரி ஆசிரியர் ஒருவரின் கடிதமொன்று ''வாசகர் திருமுகம்'' பகுதியில் இடம்பெற்றிருந்தது. மதிய போசன இடைவேளையின்போது ஆசிரியர்கள் வீடு செல்ல முடியாதுள்ளதாகவும் அசௌகரியங்களுக்கு ஆளாவதாகவும், அவர் குறிப்பிட்டிருந்தார்.

அவ் ஆசிரியர்களுக்குரிய கஷ்டங்கள் எம்போன்ற உயர்தர வகுப்பு மாணவர்களுக்கும் உண்டு. தூர இடங்களிலிருந்து நகரின் மத்தியிலுள்ள கல்லூரிக்கு வருபவர்கள் காலை நேர தனியார் வகுப்புகளுக்குச் சென்று பின்னரே கல்லூரிக்கு வருகிறார்கள். (கல்லூரி விட்ட பின்பு தனியாக கல்வி நிலையங்களுக்குச் செல்பவர்களும் உண்டு) இவ்வாறாக ஓய்வின்றி ஓடித்திரியும் மாணவர் கூட்டம் எதிர் நோக்கும் பிரச்சினைகளை உரியவர்கள் உணர்ந்து செயற்படுவார்களா?

செல்விகள்
வ. சுமதி
எஸ். விஜித்தா
நல்லூர்

## கண்காட்சி

நெடுந்தீவு, ஜூன் 6

நெடுந்தீவு கொத்தணியின் கீழ் உள்ள அனைத்து ஆரம்ப பாடசாலை மாணவர்களினதும் கல்வி அபிவிருத்தியை வெளிக்காட்டும் வகையில் கண்காட்சி ஒன்றினை நடத்தும் முயற்சியில் கொத்தணி அதிபர் ஈடுபட்டுள்ளார். நெடுந்தீவிலுள்ள பத்துப் பாடசாலைகளும் இதில் பங்குபற்றும் என நம்பப்படுகிறது. [இ-111]

## நாணய மாற்று விகிதம்

04-06-1990

இலங்கை மத்திய வங்கிக்கும், வர்த்தக வங்கிகளுக்கும் இடையிலான உடன் மாற்றுவிகிதம்:-

| | | வாங்குதல் | விற்றல் |
|---|---|---|---|
| 100 | இந்திய ரூபா | 229.55 | 230.51 |
| 100 | அமெரிக்க டொலர் | 3997 40 | 4002.60 |
| 100 | ஸ்ரேர்லிங் பவுண்ட் | 6680 80 | 6732.58 |
| 100 | ஜேர்மன் மார்க் | 2340.77 | 2362.85 |
| 100 | பிரெஞ்சு பிராங்க் | 689 46 | 703.77 |
| 100 | ஜப்பானிய யென் | 26.0825 | 26.3850 |

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**I. A. B (Inter & Finals)**
**DEC 1990 EXAMINATION**

வகுப்புக்கள் ஆரம்பம்: 9 6- 1990

பதிவுகளுக்கு:

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**
(Result Oriented Institute in North)
14, St. PETERS LANE,
HOSPITAL ROAD,
JAFFNA.

(சி/4701)


## ★ ஐந்து மாதப்போராட்டத்தைத் தொடர்ந்து
# புரட்சிப்படைகளிடம் லைபீரியா எந்நேரமும் வீழ்ச்சியடையலாம்!

### அமெ., பிரிட்டிஷ் யுத்தக்கப்பல்கள் ஆயத்தநிலையில்

மொன்றோவியா ஜூன் 5 லைபீரியாவில் ஜனாதிபதி சாமுவல் டோ தலைமையிலான அரசாங்கம் எந்த நேரமும் புரட்சிப் படைகளிடம் வீழ்ச்சி அடையலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சாமுவல் டோவின் அரசுக்கு எதிராக தேசிய விசுவாச முன்னணி ஆரம்பித்த ஆயுதப் போராட்டம் உச்சக் கட்டத்தை அடைந்துள்ளது.

புரட்சிப் படைகள் நாட்டின் பெரும்பாலான நகரங்களை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விட்டன.

இப்போது தலைநகர் மொன்றோவியாவில் இருந்து 35 மைல் தொலைவில் உள்ள சர்வதேச விமான நிலையத்தையும் புரட்சிப் படைகள் பிடித்து விட்டன.

தேசிய விசுவாச முன்னணியின் கொடிகளே சர்வதேச விமான நிலையத்தில் பறக்கின்றன.

சர்வதேச விமான நிலையத்தில் இருந்து அரசுப் படைகள் வாபஸாகி விட்டன என்று அப்பகுதி வாசிகள் தெரிவித்தனர்.

இதேவேளை- மொன்றோவியாவில் உள்ள அமெரிக்கப் பிரசைகளுக்கு உதவுவதற்காக அமெரிக்கக் கடற் படையின் ஆறு கப்பல்கள் ! ' ' வீரர்களுக்குடன் மொன்றாவியா துறை முகத்தில் நிற்கின்றன.

பிரிட்டிஷ் பிரசைகளைப் பாதுகாக்க பிரிட்டிஷ் யுத்தக் கப்பல்களும் அங்கு சென்றுள்ளன.

இதனிடையில் - ஜனநாயகத்தைப் பாதுகாக்க உதவும்படி ஜனாதிபதி சாமுவல் டோ அமெரிக்காவுக்கு வேண்டுகோள் விடுத்திருந்தார்.

புரட்சிப் படைகளின் நெருக்கடியைத் தணிக்க ஜனாதிபதி தெரிவித்த சமரச யோசனைகள் நிராகரிக்கப்பட்டு விட்டன.

தேர்தலை உடனடியாக நடத்துவதற்காகவும் அதில் தான் போட்டியிடவில்லை என்றும் ஜனாதிபதி டோ தனது யோசனையில் தெரிவித்திருந்தார். (எ)

## ★ காபூலில் உள்ள
# தொண்டர் நிறுவனங்கள்மீது கெரில்லாக்கள் தாக்குதல்!

காபூல் ஜூன் 6 பாகிஸ்தான் - ஆப்கன் எல்லைப் பிராந்தியத்தில் அமைந்துள்ள மேற்குலகநாடுகளில் உதவி வழங்கும்நிலையங்கள் மீது கெரில்லாக்கள் தாக்குதல் நடத்தியுள்ளன.

இது அமெரிக்க விஷய பேச்சுவார்த்தைகளுக்குக் குந்தகம் விளைவிக்க எடுக்கப்பட்ட முயற்சியாகும். என்று ஆப்கன் அரசு குற்றஞ்சாட்டியது.

ஹிக்மதியா கட்சியைச் சேர்ந்த நூறு தீவிரவாதிகள் இத் தாக்குதலைமேற்கொண்டனர்.

ஆஸ்திரிய தர்ம நிலையங்கள் முக்கியமாகதாக்கப்பட்ட கட்டங்களாகும். கெரில்லாக்களின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் இந்த அமைப்பு அமைந்துள்ளது.

இதே நேரம் பாகிஸ்தானில் உள்ள ஆப்கன் அகதிகள் சர்வதேச அமைப்புக்களிடம் பாதுகாப்புக் கோரியுள்ளனர் என்று ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன. [எ]

## ★ லண்டன் கிரிக்கெட் போட்டி
# யாழ்.மத்திய கல்லூரியின் பழைய மாணவர் வெற்றி!

இங்கிலாந்திலுள்ள இலங்கை கல்லூரிகளின் பழைய மாணவர்கள் சங்கங்களால் ஏற்பாடு செய்யப்பட்ட கிரிக்கெட் போட்டியில் றோயல் கல்லூரியின் பழைய மாணவர் அணியினை வென்று யாழ் மத்திய கல்லூரியின் பழைய மாணவர் அணி சம்பியனாகியது.

பழைய மாணவர் சங்கங்களின் வெற்றிக் கிண்ணத்திற்காக நடத்தப்பட்ட இப் போட்டி ஆரம்ப சுற்று போட்டிகளிலிருந்தே மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்றது.

சறி இலுள்ள வேசெஸ்டர் பார்க்கில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் கொழும்பு றோயல் கல்லூரியின் பழைய மாணவர் அணிக்கு எதிராக யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் பழைய மாணவர் அணி மோதியது.

போட்டியின் இறுதியில் மிக விறுவிறுப்பாக நடந்த இப் போட்டியின் இறுதியில் போட்டியின் கடைசிப்பந்து வெற்றி தோல்வியை நிர்ணயிக்கப்போகும் பந்து வீசப்பட வேண்டி இருக்கிறது.

றோயல் கல்லூரியின் பழைய மாணவர் அணியினர் வெற்றிபெற 3 ஓட்டங்கள் தேவையான நிலையில் அணித் தலைவர் அஜித ஜெயவீர ஆடதயாராக நிற்க மைதானத்தில் திரண்டிருந்த றோயல் கல்லூரியின் அணியின் ஆதரவாளர்கள் கல்லூரியின் கீதத்தை இசைகக, யாழ் மத்திய கல்லூரியின் ஆதரவாளர்கள் பரபரப்பின் உச்சத்தில் உறைந்த நிலையில் இருக்க யாழ்ப்பாணத்து வீரர்கள் அந்த பந்தினை ஓட்டமெதுவும் எடுக்க இயலாதவாறு வீசி வெற்றியீட்டினர்,

இப் போட்டியில் திரட்டப்பட்ட நிதி மகரகம புற்று நோய் வைத்திய சாலையின் சிறுவர் பிரிவுக்கு வழங்கப்பட இருக்கிறது. (எ-மு)


**EXHIBITION**

**Chundikuli Girls' College - Jaffna**
**Dr. E. M. Thilliampalam Institute**
**For Vocational Studies**

An exhibition of Iced Cakes, Bouquet and flower arrangements, Handicrafts, Macreme, Pot Paintings, Hair Styles and Garments will be on display on 6th, 7th and 8th June 1990 from 9 a. m. to 6 p. m.

PRINCIPAL.

[C/4638]



## கந்தளாய் சிவன்கோவில் திருப்பணிச் சபை வேண்டுகோள்

அன்புடையீர்
**தங்களிடம் திருப்பணிச்சபையினர் கனிவாக வேண்டுவது...**


சுமார் 15ம் நூற்றாண்டில், சோழர்களால், சோழ சிற்ப முறையில் அமைக்கப்பட்ட "சதுர்வேத மங்கள புரம்" என்றும், "பிராமண புரம்" என்றும் அழைக்கப்பட்ட சோழீஸ்வரர் ஆலயம் (கந்தளாய் சிவன் கோயில்.) அந்நியரால் அடித்து நொறுக்கப்பட்டது. இன்று, உடைக்கப்பட்ட இலிங்கங்கள், அம்பாள் சிலைகள், கிரந்தத்தில் எழுதப்பட்ட கல்வெட்டுக்கள், சித்திரங்கள், வடிக்கப்பட்ட கற்றூண்கள், எனப் பலப்பல காட்சியளிக்கின்றன. இந்தக் கலைப்பொக்கிசங்களை பாதுகாக்குமுகமாகவும், இருந்த இடத்திலேயே சோழீஸ்வரர் ஆலயத்தைக் கட்டி எழுப்பும் பணியிலும் திருப்பணிச் சபையினர் ஈடுபட்டுள்ளனர். அதற்கு பல வழிகளில் நிதியைச் சேர்த்து வருகின்றனர். அதில் பரிசுச்சீட்டுக்களைத் தயாரித்து, ஒவ்வொரு கிராமத்திலும், விநியோகித்து வருகின்றார்கள். அவற்றிற்கு தவறாது ஒவ்வொருவரையும் ஆதரவு நல்கும்படியும், மேலதிகமாகப் பொருளுதவி செய்ய விரும்புபவர்கள், பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளும்படி அன்பாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

திரு. சி. கனகலிங்கம்,
கௌரவ செயலாளர்,
திரு/பேராறு பரமேஸ்வரா மகா வித்தியாலயம்,
கந்தளாய்.

[13337]



## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அச்சுவேலியில் அரச படையோடு ஏற்பட்ட நேரடி மோதலில் வீரமரணமடைந்த

**க. நவநிதி (பவான்)**

| வீரத்தாயின்மடியில்: | வீரமண்ணில்மரணம்: |
|---|---|
| 23 - 04 - 1966 | 06 - 06 - 1987 |

செந்நீர் பெருகும் செந்தமிழ் நகரில்
செருக்களமாயின குடியமர் வீடுகள்
போர்வழி தவறிய பொறுப்பிலா அரசோ
யாருரைத்தென்ன ஆணவம் கொள்ளுதே
சீர்மிகு சிற்றூர் சிறந்த அச்சுவேலியின்
வேரினை அறுக்கவே விரைந்திட்ட படைகள்
கோரமாய் வீசிய யாசகக் குண்டால்
பாரமாய் நின்ற உடமைகள் தீர்ந்தன
வீரமாய் எம் நகர்காக்கும் வேங்கையர்
தீரமாய்த் தொடுத்த உக்கிரச் சமரில்
கூலிப்படைகள் கூவென்றோடிட
குண்டுகள் தீர்த்த இளம்புலி நவநிதி
சிறிப்பாயும் சீற்றம் கொண்டுமே
மாற்றான் படையை சல்லடை போட்டனன்
ஊற்றாய் வீர உணர்வுகள் நிரம்பிய
மேயர் அல்பேட்டின் சகோதரன் இவனோ
வேகம் குறையா விறுகொள் வேங்கை
மோகத்தமிழில் தாகங் கொண்டவன்
பாவந்தேடும் பாதகப் படையினர்
மறைவினில் ஏவிய மாயக் குண்டினை
மார்பினில் ஏற்று மரபினைக் காத்த
தியாகியின் ஆத்மா சாந்தி கொண்டிடவே
ஈழம் மீட்கும் சக்தியாய் மாறுவோம்

உன் பிரிவால் வாடும்:
பெற்றோர், சகோதரர்கள்
அண்ணிமார், உறவினர்கள்,
நண்பர்கள்.

அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

(3700)


### மண்டேலாவின் சுற்றுப்பயணம்

கேப்டவுன், ஜூன் 5 தென் ஆபிரிக்க கறுப்பு இனமக்களின் தலைவர் நெல்சன் மண்டேலா நேற்று 15 நாடுகள் சுற்றுப்பயணம் ஒன்றை ஆரம்பித்தார்.

ஆறு வாரகாலம் நீடிக்கும் இந்தவிஜயத்தின் போது அமெரிக்கா, ஆபிரிக்க நாடுகள் மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு நெல்சன் மண்டேலா செல்வார். (எ)

### மாற்றம் கிடையாது

ஸ்ரீ நகர், ஜூன் 05 காஷ்மீர் தீவிரவாதிகள் மீது கடும் நடவடிக்கை எடுப்பது என்ற இந்திய அரசின் கொள்கையில் மாற்றமே கிடையாது ஜம்மு- காஷ்மீர் மாநில ஆளுநர் கிரிஷ் சந்திரா சக்ஸேனா நேற்று மேற் கண்டவாறு தெரிவித்தார். (எ)

### குண்டு வெடிப்பில் ஐவர் மரணம்

சண்டிகார், ஜூன் 5 பஞ்சாப் மாநிலத்தில் பாட்டியாலா நகரில் நேற்று இரண்டு குண்டுகள் வெடித்ததில் ஐந்துபேர் உயிரிழந்தனர்; 30 பேர் வரையில் காயமடைந்தனர்.

உயிரிழந்தவர்களில் மூவர் சிறுவர்கள் ஆவர். இரண்டு குண்டுகளும் பதினைந்து நிமிட இடை வெளியில் நகரின் வெவ்வேறு இடங்களில் வெடித்தன (எ)

### கோர்பி- றேகன் சந்திப்பு

வாஷிங்டன், ஜூன் 05 சோவியத் ஜனாதிபதி மிக்கெய்ல் கோர்பச்சேவ் நேற்று அமெரிக்காவின் முன்னாள் அதிபர் றொனால்ட் றேகனை சான்பிரன்ஸிஸ்கோவில் வைத்து சந்தித்தார்.

அரை மணி நேரம் இருவரும் பேசிக்கொண்டார்கள்.

கோர்பச்சேவின் அமெரிக்க விஜயத்தின் போது இச்சந்திப்பு இடம் பெற்றது.



குமுலுஸ் D.F. போட்டி

**BASF**
**குமுலுஸ் D.F.**
**பாவித்து மிளகாய் செய்கையில் அதிக விளைவு பெறுவதோடு பரிசுகளையும் பெறுங்கள்**

| | |
|---|---|
| நப்சாக் தெளி கருவி — | 5 |
| ஸ்போட்ஸ் துவிச்சக்கர வண்டி — | 5 |
| கைத்தெளி கருவி — | 5 |
| சிறிய வானொலிப்பெட்டி — | 20 |
| எவரெடி ரோச் லைற் — | 48 |
| ரீ சேட் — | 100 |

மிகவும் இலகுவாக இந்த போட்டியில் பங்குபற்றலாம். நீங்கள் செய்ய வேண்டியது.

1. கீழேயுள்ள கூப்பனை அல்லது குமுலுஸ் DF பைக்கற்றுகளிலுள்ள கூப்பனை நிரப்பி, குமுலுஸ் பைக்கற்றுகளின் மேல்பகுதியை வெட்டி ஒவ்வொரு கூப்பனுடனும் 5 குமுலுஸ் மேல்பகுதிகளை சேர்த்து. பின்லே கெமிக்கல்ஸ் அன் டைஸ் (பிரைவேட்) லிமிட்டெட், 186 வக்சோல் வீதி, கொழும்பு 2 என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். ஒருவர் பலமுறை அனுப்பலாம்.
2. தபாலுறையின் இடதுபக்க மேல்பகுதியில் "குமுலுஸ் DF போட்டி" என எழுதவும்.
3. போட்டியின் முடிவு திகதி 30-06-1990
4. போட்டியின் அதிஸ்டசாலிகளின் பெயர்கள் பத்திரிகை மூலமும் கடிதம் மூலமும் அறிவிக்கப்படும்.
5. பின்லே கெமிக்கல்ஸ் ஊழியர்களும், பெர்ஸ்ற் அன் போவேட் லிமிட்டெட் ஊழியர்களும் இந்த போட்டியில் பங்குபற்றமுடியாது.




வெட்டி அனுப்பவேண்டிய பகுதி



FINCHEM AGRO DIVISION
பின்லே கெமிக்கல்ஸ் அன் டையிஸ் (பிரைவெட்) லிமிட்டெட்
(விவசாய இரசாயன பகுதி)
186. வக்சோல் வீதி, கொழும்பு 2.

பெயர் ________
முகவரி ________
________
வியாபாரியின் பெயர் ________
________
முகவரி ________
________

Licence No S/731

பீடை நாசினிகள் அபாயகரமானவை. **அவதானமாக பாவிக்கவும்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறந்தநாள் வாழ்த்து



## செல்வன் அருமைராஜா திவாகர்

பண்டித்தறை, நெல்லியடி, கரவெட்டியை இருப்பிடமாகக் கொண்ட அருமைராஜா சிவதேவி தம்பதிகளின் அருந்தவப் புதல்வன் செல்வன் திவாகர் தனது முதலாவது பிறந்தநாளை 6-6-90 இன்று தனது இல்லத்தில் மிகவும் குதூகலமாக கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, கனடாவில் இருக்கும் அம்மப்பா A. R. M. இராசேந்திரம், அம்மம்மா, தேவி (கனடா) மூத்தமாமா மூர்த்தி (கனடா), மாமி வாணி (கனடா), மச்சாள் ரேவதி (கனடா), உதயன்மாமா (கனடா), பகீர்மாமா (கனடா), கோமதிச் சித்தி (கனடா), சிவகுமார் சித்தப்பா (கனடா), சாந்திசித்தி (கனடா) எல்லோரும் அவரை பல்லாண்டு காலம் சிறப்புடன் வாழ வாழ்த்துகிறார்கள்.

[3667]

# தேவை

**உடைந்த வெள்ளை போத்தல் ஓடுகள் தேவை**

எமது தொழிற்சாலைக்கு நேரில் கொண்டு வந்து தருபவர்களுக்கு ஒரு கிலோவுக்கு 1 ரூபா 10 சதம் வீதம் வழங்கப்படும்.

எமது தொழிற்சாலைக்காக எவராவது தமது இடங்களிலேயே போத்தல் ஓடுகளை சேகரிக்கலாம் தகுதியுள்ளவர்களுக்கு முற்பணம் வழங்கப்படும். போத்தல் ஓடுகள் சேர்ந்தவுடன் எமக்கு அறிவித்தால் உடனடியாக வந்து ஒரு கிலோவுக்கு ஒரு ரூபா வீதம் பணம் செலுத்தி பெற்றுக் கொள்வோம்.

யாழ்ப்பாணத்துக்கு வெளிமாவட்டங்களில் உள்ளவர்களும் ஓடுகளை சேகரித்து எமக்கு அறிவித்தால் நாம் வந்து அவற்றைப் பெற்றுக் கொள்வோம்.

த பெனின்சுலா குறூப்,
மகேந்திரா கண்ணாடித் தொழிற்சாலை,
அரஸ்கோ கட்டடம்,
163, கண்டி வீதி,
அரியாலை, யாழ்ப்பானம்.

[சி-4704]

# SPECIAL ENGLISH COURSE

விசேட

## ஆங்கில மொழிப் போதனை

- ★ பேச- எழுத- வாசிக்க- கிரகிக்க
- ★ பாடசாலை விலகியோர், உயர் கல்வி மாணவர், ஆங்கில மொழியில் ஆர்வமுடையோர்க்காகிய கற்கை நெறி
- ★ 6 மாத, துரித, விரிவான போதனை
- ★ வாரநாள் வகுப்புகள்.

**ஆரம்பம்: 08- 06- 1990 பி. ப. 3 மணி**

ஆசிரியர்: த. ந. பஞ்சாட்சரம்

தொடர்பு:

நிர்வாகி
**NEW SCIENCE ACADEMY**
OPP. B. M. C. JAFFNA.

(சி/4712)

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு

**★ சைப்பான் - மஜுரோ ★**

சைப்பான், மஜுரோ நாடுகளில் தொடர்மாடி கட்டுமான வேலைகட்கு அனுபவம்வாய்ந்த வேலையாட்கள் தேவைப்படுகின்றதுனர்.

**தச்சர்மார், கம்பிவேலைகாரர், எலக்ரிஷியன்ஸ் மேசன்மார், பிளம்பர்மார், மெக்கானிக்ஸ்**

சம்பளம் US டொலர் 1½ / மணித்தியாலம்
OT US டொலர் 2¼ / மணித்தியாலம்

விண்ணப்பதாரிகள் 10 புகைப்படம், பிறப்புச் சான்றிதழ், மருத்துவச் சான்றிதழ், பாஸ்போட் சகிதம் நேரில் வரவும். 8.30 — 4.30 வரை.

வி. ஸ்ரீரஞ்சனி, கொல்லன்கலட்டி வீதி, தெல்லிப்பளை மேற்கு. (அம்பனைச் சந்திக்கும் உபதபாற் கந்தோருக்கும் இடையில்) அல்லது

பொ. நந்தகுமார், அன்பகம், உடுவில் கிழக்கு, சுன்னாகம். (உடுவில் A G.A. Office முன் வீதி.)

[13321]


## பல்கலை விடுமுறை

கொழும்பு, ஜூன் 6

விடுமுறைக்காக சகல பல்கலைக்கழகங்களும் மூடப்பட்டுள்ளன என்று அரசு அறிக்கை ஒன்று தெரிவித்தது. [ஓ-எ]

## நாளை தேர்

அருள்மிகு சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் கோயில் தேர்த்திருவிழா நாளை வியாழக்கிழமை மாலை 3. 00 மணிக்கு நடைபெறும். தீர்த்தத் திருவிழா மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9. 00 மணிக்கு நடைபெறும். (ஓ)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

### மகாபொல கொடுப்பனவு -1988/98

**9ஆம், 10ஆம் தவணைப் பணங்கள்**

### மருத்துவபீட மாணவர்கள்

| | | |
|---|---|---|
| I 2ஆம், 3ஆம் வருடங்கள் | 05. 06. 90 | 9. 00 - 12. 00 |
| | 08. 06. 90 | 9. 00 - 12. 00 |
| | 11. 06. 90 | 1. 30 - 3. 00 |
| II. 4ஆம், 5ஆம் வருடங்கள் | 05. 06. 90 | 1. 30 - 3. 00 |
| | 06. 06. 90 | 9. 00 - 12. 00 |
| | 11. 06 90 | 9. 00 - 12. 00 |

மேற்படி, கொடுப்பனவுக்குரிய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. கொடுப்பனவின் போது:

1. தேசிய பல்கலைக்கழக மாணவர் அடையாள அட்டை
2. ரூ 2/- பெறுமதியான முத்திரை
3. மாணவர் பதிவுப்புத்தகம் என்பன சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

★ தேசிய அடையாள அட்டைகளின்றி கொடுப்பனவுகள் செய்யப்படமாட்டாது.

—பதிவாளர்

(சி/4676)

# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 31-03-1943 | 06-06-1989 |

## திருமதி புஸ்பரத்தினம் அரியரத்தினம்

எங்கள் இல்லத்தின் தெய்வமாக துலங்கிய
எங்கள் நல்வாழ்வுக்கு வழிகாட்டியாய்
விளங்கிய எமது அன்புத் தாயே
எங்களைத் தவிக்கவிட்டு நீங்கள்
இறைவனடி சேர்ந்த போதும் உங்கள்
நினைவு எங்கள் நெஞ்சங்களில்
அணையாத ஒளித்தீபமாக ஒளி வீசும்

உங்கள் ஆத்மசாந்திக்காக கர்த்தரை வேண்டுகிறோம்.

168, கே. கே எஸ் றோட்,
கொக்குவில்.

திரு. S. G. அரியரத்தினம்
குடும்பத்தினர்.

(13405)


## சென். பற்றிக்ஸ் பெற்றோர் தின விழா

யாழ்ப்பாணம், ஜூன் 6

யாழ்ப்பாணம். சென். பற்றிக்ஸ் கல்லூரி ஆரம்ப பாடசாலை பெற்றோர் தினம் இன்று புதன்கிழமை மாலை 5 மணிக்கு கல்லூரியில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. தியாகராஜாவும் திருமதி. தியாகராஜாவும் கலந்து கொள்வார்கள். (இ-7)

## பெற்றோர் ஆசிரியர் தினம்

யாழ்ப்பாணம், ஜூன் 6

கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாலயத்தில் இன்று புதன்கிழமை பிற்பகல் 1 மணிக்கு பெற்றோர் ஆசிரியர் ஒன்று கூடல் தினம் பாடசாலை அதிபர் கா. கணேசநாதன் தலைமையில் நடைபெறும்.

மாணவர்களின் கற்றல் முயற்சிகளிலும், அவர்களின் நற்குணங்கள், நல்லொழுக்கப் பண்பியல் நெறிகளைப் புகட்டுவதிலும், பெற்றோர், ஆசிரியர்கள் எடுக்க வேண்டிய அக்கறை சம்பந்தமாக கலந்துரையாடப்படும். (இ-7)

## சங்காபிஷேகம்

சுழிபுரம், ஜூன் 6

பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்திகோவிலில் இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு சங்காபிஷேகமும், நண்பகல் 12 மணிக்கு ராஜகோபுர அத்திவார அங்குரார்ப்பண விழாவும், மாலை 4 மணிக்கு விசாகப் பெருவிழாவும் நடைபெறும். (இ 28)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

### கேள்விப்பத்திர அறிவித்தலுக்கான திருத்தம்

**1000 வெள்ளிப்பதக்கம் வழங்கல்**

எமது 5 6-90 திகதிய மேற்படி கேள்விப்பத்திரத்திற்கான விளம்பரத்தை பின்வருமாறு திருத்திக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

வெள்ளியிலாலான 70x55 செ. மீ அளவுடைய நீள்வட்ட வடிவான 1000 பதக்கங்கள் என்பது

எவர்சில்வரிலான (Eversilver) 70x55 மில்லிமீற்றர் அளவுடைய 1000 பதக்கங்கள் என்பதாகும்.

பதிவாளர்.

(C/4677)

# Computer Programming Courses

| | Commencement | Days | Time |
|---|---|---|---|
| BASIC | 07 - 06 - 90 | Tue | 10.30 — 12.30 |
| | | Thu | 10.30 — 12.30 |
| LOTUS 1, 2, 3 | 11 - 06 - 90 | Mon | 9.00 — 11.00 |
| | | Wed | 9.00 — 11.00 |
| dBASE + III | 12 - 06 - 90 | Tue | 10.30 — 12.30 |
| | | Thu | 10.30 — 12.30 |
| WORD PROCESSING | 14 - 06 - 90 | Tue | 8.30 — 10.30 |
| | | Thu | 8.30 — 10.30 |
| | BOOK KEEPERS | | |
| I. A. B - Inter | 09 - 06 - 90 | Sat | 1.00 — 3.00 |
| | | Sun | 1.00 — 3.00 |
| I. A. B - Final | 16 - 06 - 90 | Sat | 3.00 — 5.00 |
| | | Sun | 3.00 — 5.00 |

C. I. M. A & A. A. T
CLASSES HAVE JUST COMMENCED

**SCHOOL OF BUSINESS ADMINISTRATION**
(Leaders in Computer Education)
**16, 3rd Cross Street,**
(West of O. L. R Church)
JAFFNA.

[சி-4708]


## சுற்றாடல் தினம் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 6

யாழ். மாவட்டத்தில் ஐ நா. சுற்றாடல் தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

இந்த தினத்தையொட்டி ஆஸ்பத்திரி வீதி இலங்கை வங்கிக்கிளையில் நேற்று மர நடுகை வைபவம் இடம் பெற்றது.

நேற்று மாலை யாழ். சம்பத்தரிசியார் கல்லூரியில் ஓவியக் கண்காட்சியும் கூட்டமும் நடைபெற்றன. (ஓ-3)


# CIMA Stage II and Stage III Nov 1990 Exam

புதிய வகுப்புக்கள் ஆரம்பம்: 09 - 06 - 1990

CONTACT

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**
(Result Oriented Institute in North)
14, St. Peters Lane,
Hospital Road, Jaffna.

GROUP

[சி-4649]

# காணவில்லை

சுமார் 13 வயது மதிக்கத்தக்கதும் கண்டி நகரைப்பிறப்பிடமாகக் கொண்டதுமான சிறுமி ஒருவர் கடந்த 28. 5. 90 ந் திகதி தொடக்கம் சம்பியன் லேன் கொக்குவிலில் இருந்து காணாமல் போய்விட்டார். உயரம் 3½ அடி நிறம் கருமை தலைமயிர் கருமை நிறமுடையவர் மேற்படி கூறப்பட்ட அடையாளங்களையுடையளங்கேயேனும் காண்பவர்கள் தயவுசெய்து

**P. சுத்தானந்தன், சம்பியன் லேன் கொக்குவில்.**

என்ற விலாசத்திற்கு அறிவிக்கவும் அல்லது

**S. P. S. போக்கு வரத்துச் சேவை
27, விக்டோறியா வீதி,
யாழ்ப்பாணம்.**

தகவல் தருபவருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(13407)

### தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் வருடாந்தப் பொதுக்கூட்டம்

காலம்: 1990-06-08 வெள்ளிக்கிழமை பிற் பகல் 2.00 மணி

இடம்: யா/புனித திரேசா மகளிர் வித்தியாலயம், அச்சுவேலி

பிரதம விருந்தினர்: திரு இரா. சுந்தரலிங்கம் யாழ் மாவட்டக் கல்விப் பணிப்பாளரும் வடமாகாண கல்வி அதிபதியும்

உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது சமூகம் தருமாறு வேண்டுகிறோம்.

| | |
|---|---|
| வை. சச்சிதானந்தம் | ச. செல்லத்துரை |
| செயலாளர் | தலைவர் |

அச்சுவேலி,
04-06-1990.

[சி-4714]

# தேவை

கண்ணாடி தொழிற்சாலையில் வேலை செய்வதற்கு இளைஞர்களும், பெண்களும் தேவை. சம்பளத்துடன் இதர சலுகைகளும் வழங்கப்படும்.

நேரில் வரவும்:

த பெனின்சுலா குறூப்,
மகேந்திரா கண்ணாடித் தொழிற்சாலை,
அரஸ்கோ கட்டடம்,
163, கண்டி வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

[சி-4706]

# 3வது ஆண்டு நினைவஞ்சலி



படைப்பு:
1962 - 10 - 01

அழிப்பு:
1987 - 06 - 06

## சதாசிவம் ரங்கநாதன் (குமணன்) அளவெட்டி

அச்சுவேலியில் இடம்பெற்ற நேரடி மோதலில் வீரமரணம் அடைந்த வீரவேங்கை குமணனுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

உன் பிரிவால் வாடும்:
**அன்பு அம்மா, சகோதரர்கள்.**

அளவெட்டி தெற்கு,
அளவெட்டி.

(3808)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடன் அழைக்கின்றது

**ஆர்த்தி ஜுவல்லர்ஸ்**

- ✶ தரமான வர்ண நிழற்படபிரதி ஒன்று 3R/PC - 6/30, 5/90, 5/50
- ✶ விநியோகம் ஒரு வாரம் [7 Days]
- ★ விற்பனை - வர்ண நிழற்படச் சுருள்கள்

பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

# உதயன்

06 - 06 - 1990 புதன்கிழமை

எம்மிடம் வர்ண நிழற்பட பிரதிகள், பிரதியாக்கம் செய்பவர்களுக்கு பட அல்பங்கள், படச்சுருள்கள் இலவசமாக வழங்கப்படும்

மேலதிக விபரங்களுக்கு:

**ஆர்த்தி ஜுவல்லர்ஸ்**
111, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.,

# மாணவர் எண்ணிக்கை அடிப்படையிலேயே இனி பல்கலைக்கழகங்களுக்கு நிதி ஒதுக்கீடு

## யாழ்ப்பாணத்துக்கு ரூபா 6½ கோடி மட்டுமே

யாழ்ப்பாணம், ஜூன் 6
யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலேயே அலுவலக செலவுக்கான ஒதுக்கீடு மற்றும் உபகரணங்கள் கொள்வனவுக்கான ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

நாட்டில் உள்ள பல்கலைக் கழகங்களில் கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலேயே அந்த பல்கலைக்கழகங்களுக்கு நிதி ஒதுக்கீடுகள் வழங்குவதென்ற பல்கலைக்கழக மான்ய ஆணைக்குழுவின் முடிவுக்கிணங்க ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கலைப்பீட மாணவனுக்கு 6 ஆயிரத்து 410 ரூபா, விஞ்ஞானபீட மாணவனுக்கு 20 ஆயிரத்து 147 ரூபா மருத்துவபீட மாணவனுக்கு 20ஆயிரத்து 773 ரூபா என்ற அடிப்படையில் வருடாந்த ஒதுக்கீடு வழங்கப்படும்.

யாழ். பல்கலைக்கழகத்துக்கு இந்தவருடம் 2 ஆயிரத்து 898 மாணவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் ஆறு கோடி 65 லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் வழங்கப்பட்ட உதவிகளிலும் பார்க்க இந்த ஒதுக்கீடு குறைவகனது என்று பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன. [ஒ-2-10]

## யாழ் ஆஸ்பத்திரி வீதி
# வங்கிக்கிளையில் நிவாரணம்

யாழ்ப்பாணம், ஜூன் 6
யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி இலங்கை வங்கிக் கிளையில் எதிர்வரும் 9 ஆம் திகதி சனிக்கிழமை பின்வரும்கிராம சேவையாளர் பிரிவுகளில் ரூ 4000 கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

தாவளையற்றாலை, வரணி வடக்கு. நாவற்காடு, எழுதுமட்டுவாள், தவசிகுளம், கொடிகாமம், கைதடி நுணாவில், நுணாவில் கிழக்கு, நுணாவில் பேற்கு, கல்வயல் மறவன் புலோ.

ரூ 3681 நிவாரணம் வழங்கப்படும் கிராம சேவையாளர் பிரிவு மிருசுவில்.

ஏற்கனவே வழங்கப்பட்ட ரூ. 1000, ரூ 3681, ரூ. 4000 கொடுப்பனவுகளைப் பெறத் தவறியோரும் அன்றைய தினம் பெற்றுக் கொள்ள முடியும். என்று அறிவிக்கப் பட்டுள்ளது. (இ)

## திறந்த பல்கலைக் கழகத்தில்
# கணித, விஞ்ஞான ஆசிரியருக்கு விஞ்ஞான மாணி பயிற்சி

யாழ்ப்பாணம், ஜூன் 6
யாழ். திறந்த பல்கலைக் கழகத்தில் விஞ்ஞான மாணி பயிற்சி நெறி மேற்கொள்ள ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கான அறிவிப்பு ஒன்று சகல பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதன்படி விஞ்ஞான, கணித பாடங்களுக்கான ஆசிரியர்கள் இந்த கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க முடியும்.

இம்மாதம் 15 ஆம் திகதி முன் திறந்த பல்கலைக் கழகத்தின் யாழ். பிரதேச நிலையத்தின் உதவிப் பணிப்பாளருடன் தொடர்பு கொண்டு விண்ணப்பங்களை பெற்றுக் கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளது. (உ-9)

# இ.போ.ச. புதிய திட்டம் பற்றி அமைச்சர் 'விஜே' விளக்கம்

கொழும்பு, ஜூன் 6
இலங்கை போக்கு வரத்துச் சபையின் நடவடிக்கைகளைத் தனியாரிடம் ஒப்படைக்கும் ஒரு முயற்சியாக மக்கள்மயப்படுத்தும் திட்டத்தை எடுத்துக் கொள்ளக் கூடாது.

அமைச்சர் விஜேபால மென்டிஸ் நேற்றுமுன்தினம் நடந்த அரச நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் முன்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

இ. பே. ச. நிர்வாகத்தை மக்கள் மயப்படுத்தும் திட்டம் பற்றி அரச நாடாளுமன்றக் குழுவிடம் விவரிக்கப் பட்டது.

மக்கள் மயப்படுத்தும் திட்டத்தின் கீழ் ஓர் ஊழியர் பத்துச் சதவீதம் பங்குகளை மட்டுமே வைத்துக் கொள்ள அனுமதிக்கப்படுவர் என்றும் அமைச்சர் விஜேபால மென்டிஸ் சொன்னார். (ஒ-எ)

## வேண்டுகோள்

31-05-90 அன்று முல்லைத்தீவு 29 சிறி 4508 மினி பஸ்சில் யாழ் நோக்கி வந்து கொண்டிருந்த போது பஸ்சில் பிரயாணம் செய்த ஒருவரிடம் வைத்திருக்கும்படி கொடுத்த 3 வீடியோ கசட்டுகளை அவர் தவறுதலாக கொண்டு சென்று விட்டார். தயவு செய்து அந்த கசட்டுகளை உதயன் காரியாலயத்திலோ அல்லது முல்லைத்தீவு மினிபஸ் நேரக்காப்பாளரிடமோ ஒப்படைக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

(3810)

## அறிவித்தல்

### நல்லூர் வர்த்தக சங்கம்

- ★ நல்லூர் பிரதேசத்தில் உள்ள வர்த்தக நிலையங்கள் சனிக்கிழமைகளில் பிற்பகல் இரண்டு மணியுடனும் ஞாயிற்றுக்கிழமைகளில் முழுநாளும் பூட்டப்பட வேண்டும்.
- ★ பத்திரிகைக் கடைகள், தேனீர்க்கடைகள், மருந்துக் கடைகள் பழக்கடைகள் இதற்கு விதிவிலக்காகும்.
- ★ இதனை மீறும் வர்த்தகர்களுக்கு ரூபா 2000/- அபராதம் விதிக்கப்படும்.
- ★ ஜூன் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னதாக விலைப்பட்டியல் பார்வைக்கு வைக்கப்பட வேண்டும்.
- ★ நல்லூர் பிரதேசத்தில் உள்ள வர்த்தகர்கள் அனைவரும் நல்லூர் வர்த்தக சங்கத்தின் அங்கத்தவர்களாகக் கருதப்படுவார்கள்.

A. M. ராஜகோபால்
தலைவர்

[13344]

## செய்திச் சாரம்

### பல்கலைக்கழக காணி வழங்கும் வைபவம்18 இல்

யாழ்ப்பாணம், ஜூன் 6
யாழ் - பல்கலைக் கழக விவசாய பீட ஆராய்ச்சிப் பிரிவுக்கென இராமநாதன் நம்பிக்கை நிதியம் 48 ஏக்கர் காணியை நன்கொடையாக வழங்கும் சம்பிரதாய வைபவம் எதிர்வரும் 18 ஆம் திகதி கிளிநொச்சியில் நடைபெற இருக்கிறது.

இந்தக் காணியைக் கொண்டு விவசாய பீட சருமங்கள் விவசாயம் சம்பந்தப்பட்ட ஆராய்ச்சிப் பணிகளில் ஈடுபடுவர்.

இந்தக் காணிக்கையளிப்பு வைபவத்தில் நம்பிக்கை நிதியத்தின் சார்பில் திரு. சிவஞானம் திரு. விஜயரத்தினம் ஆகியோரும், பல்கலைக் கழகத்தின் சார்பில் உபவேந்தர், பதிவாளர் ஆகியோரும் கலந்து கொள்வர். (ஒ-3-10)

### பயிலுநர் ஆசிரியர் சங்க கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூன் 6
யாழ் - மாவட்ட பயிலுநர் ஆசிரியர்கள் இணைந்து யாழ். மாவட்ட பயிலுநர் ஆசிரியர் சங்கம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

சங்கத்தின் முதலாவது கலந்துரையாடல் நாளை வியாழக்கிழமை காலை 9. 30 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற இருக்கிறது. (ஒ-3)

### தபால் திணைக்கள சிரேஷ்ட ஊழியர் 3 பேர் தலைமறைவு

கொழும்பு, ஜூன் 6
''கெவுடா'' இரத்தினக்கல் கடத்தல் சம்பவம் தொடர்பாக தேடப்பட்டு வந்த தபால் திணைக்களத்தைச் சேர்ந்த மூன்று சிரேஷ்ட ஊழியர்கள் காணாமற் போய் விட்டனர் என்று அறிவிக்கப் படுகிறது.

ஏஜன்ஸி தபால் நிலையம் ஒன்றைச் சேர்ந்த சிரேஷ்ட ஊழியர் ஒருவரும் இரண்டு தபால்திணைக்கள ஊழியரும் கைதானதைத் தொடர்ந்தே இவர்கள் மறைந்து விட்டனர். (ஒ-எ)

### ஆசிரிய கைநூல் மாநாட்டில் வெளியீடு

பண்டத்தரிப்பு, ஜூன் 6
எதிர்வரும் 8 ஆம் 9 ஆம் திகதிகளில் யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவிருக்கும் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பதினாறாவது ஆண்டுமாநாட்டில் இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்க வெளியீடாக ஆசிரிய கைநூல் ஒன்று வெளியிடப் படும்.

இந்நூலில் ஆசிரியர்களின் லீவு, ரயில் ஆணைச்சீட்டு, ஓய்வூதியத் திட்டம், நிவாரணக் கொடுப்பனவுகள் என்பன போன்ற விடயங்கள் அடங்கி இருக்கும். (ஒ-120)

### அனுதாப தீர்மானம் நிறைவேற்றம்

கொழும்பு. ஜூன் 6
மட்டக்களப்பு மாவட்ட எம். பி. திரு. சாம் தம்பிமுத்துவின் மறைவையொட்டிய அனுதாபத் தீர்மானம் நேற்று நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. (ஒ-2)

# கடத்தல் நடவடிக்கை: பெரும்புள்ளிகள் கைதாவர்

கொழும்பு, ஜூன் 6
கடத்தல் நடவடிக்கைகள் தொடர்பாக பெரும் புள்ளிகள் சிலர் கைது செய்யப்படுவர்.

கடத்தலில் ஈடுபட்டு கைதான இளம் பெண்கள் தந்த தகவல்களின் அடிப்படையிலேயே இவர்கள் கைது செய்யப்படவுள்ளனர்.

கொழும்பில் உள்ள பெரும் புள்ளிகள் சிலர் இளம் பெண்களைப் பயன்படுத்தி பெரும் கடத்தல்களை நடத்திவந்துள்ளனர். என்ற விபரம் அந்தப் பெண்கள் மூலம் பொலீஸ் திணைக்களத்துக்கு தெரிய வந்துள்ளது.

இது பற்றிய மேலதிக விசாரணைகளை மேற்கொள்ள இரகசியப் பொலீஸாரின் உதவி நாடப்பட்டது.

## தெரிவான முதலாவது தொகுதி
# இ. போ. ச. ஊழியருக்கு சேவைக்காலப் பணம்
## அடுத்த வாரத்தில் கிடைக்கும்

கொழும்பு, ஜூன் 6
ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் ஓய்வுபெற விண்ணப்பித்து தெரிவான முதலாவது தொகுதி இலங்கைப் போக்குவரத்துச்சபை ஊழியருக்குச் சேவைக்காலப் பணம் அடுத்த வாரம் வழங்கப்பட உள்ளது.

இத்தொகுதியில் 5ஆயிரத்து 442 ஊழியர் உள்ளனர்;

இந்தக் கொடுப்பனவுக்காக ஏற்கனவே ஒதுக்கப்பட்ட 15 கோடி ரூபாவுடன் மேலும் 11கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த ஊக்குவிப்பு ஓய்வு திட்டத்தைச் செயற்படுத்த இலங்கைப் போக்குவரத்துச் [illegible] யிருந்தது. (ஒ-எ)

### ஊனமுற்றோர் . . .
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
மாநாட்டில் கலந்து கொண்டனர்;

ஊனமுற்றோருக்கு பல்வேறு வழிகளில் புனர்வாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்வது பற்றி மாநாட்டில் ஆராயப்பட்டது.

### ஜெரமி - -
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
தார்.

திரு. ஜெரமி யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்துக்குச் சென்று [illegible] யில் ஈடுபாடுள்ள [illegible] சிரியர்களுடன் கலந்துரையாடினார். (அ-உ)

### ஈரோஸின் - - -
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
டன.

ஆறாவது திருத்தத்தை நீக்கும் வகையில் அரசு துரிதமாக செயற்படவேண்டும் என்ற எமது நிலைப்பாட்டைத் தெட்டத் தெளிவாகவும், திட்டவட்டமாகவும் எடுத்துரைத்தோம்.

எமது பேச்சுவார்த்தைகளின் விளைவாகவும், தற்போது தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், இலங்கை அரசுக்கும் இடையில் இடம்பெற்றுவரும் பேச்சுவார்த்தைகளைக் கருத்திற் கொண்டும் இலங்கை அரசு உடன் நடவடிக்கை எடுக்கும் எனக் கருதுவதால் இந்தப் பிரேரணையை இவ்வாரம் சமர்ப்பிப்பதனைத் தாமதப்படுத்தியிருக்கின்றோம். அரசு உடன் நடவடிக்கை மேற்கொள்ள இக்கால அவகாசம் பயன்படும் என நம்புகின்றோம்.

இக்கால அவகாசத்தை அரசும், எதிர்க்கட்சிகளும் உரிய முறையில் பயன்படுத்தி தமிழ் பேசும் மக்களின் அடிப்படை அரசியல் அபிலாசைகளை அங்கீகரிக்க முன்வர வேண்டும். எந்த விதமான முன் நிபந்தனைகளுக்கும் இடமளிக்காத வகையில் அரசியலமைப்பின் ஆறாவது திருத்தத்தை நீக்கி தமிழ் பேசும் மக்கள் ஜனநாயக அரசியல் செயற்பாடுகளில் நம்பிக்கை கொள்ளத்தக்க சூழலை உருவாக்கப்படல் வேண்டும் எனக் கோருகின்றோம் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

### மந்திரிசபை---
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
என்று எதிர்பார்க்கப்பட்டது.

இன்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் இதுபற்றி விரிவாக ஆராயப்படும்என்றும் —

அதன் பின்னர் அமைச்சரவைக் கூட்ட முடிவுகள் பற்றி பத்திரிகையாளர்களுக்குத் தகவல் தெரிவிப்பதற்காக் கூட்டப்படும் செய்தியாளர் மாகாநாட்டில் இதுபற்றிய விபரங்கள் வெளியிடப்படும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது.

அனேகமாக பத்திரிகையாளர் மாநாடு நாளை நடக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. [உ]

### தமிழ் எம். பி.- -
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
அந்த விவாதத்தில் கலந்து கொண்டு பேசியபோது திரு. பத்திரானா மேலும் கூறியதாவது:-

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் பாதுகாப்பு இல்லை என்பதால் சிராவஸ்தியில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது மனைவி, தாய், பிள்ளைகள் ஆகியவர்களுடன் ஓர் அறையில் முடங்கி வாழ்கிறார்கள். இரவில் அவர்கள் எப்படிப் படுக்கிறார்கள் என்பதை அங்கு போய்ப் பார்த்தால் தான் தெரியும் —என்று அவர் கூறினார்.

பதில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அநுரா பண்டாரநாயக்கா பேசுகையில், சாம் தம்பிமுத்துவின் ஒரே மகனான அருணுக்கு கல்வி வசதி, வைத்தியச் செலவு ஆகியவற்றை அரசே வழங்கவேண்டும் — என்றார்.

அமைச்சர் லலித் அத்துலத் முதலி, மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தனா, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் எம். பி. ஹிஸ்புல்லா, சுதந்திரக் கட்சி எம். பி. ஜெயராஜ் பெர்ணண்டோபுள்ளே உட்பட மற்றும் பலரும் சாம் தம்பிமுத்துவின் சேவைகளைப் பாராட்டிப் பேசினர்.

### நாடு கடத்தப்பட்ட---
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
தலைப்புலிகள் எம்மைத் தாக்கக் கூடும் என்று அச்சத்தில் 1985 மேமாதம் நாம் பாரிஸ் சென்றோம், எமது குழுவில் 5 பெண்களும் உள்ளனர்'' - என்றும் திரு. இரத்தினம் சொன்னார்.

''இந்த அகதிகள் கனடா, மேற்கு ஜேர்மனி, பிரான்ஸ் ஆகிய நாடுகளிலிருந்து வந்தார்களா என்பது பற்றி எமக்கு அக்கறை இல்லை. அரசு எம்மை அனுமதித்தால் ஒழிய நாம் இவர்களை தமிழ் நாட்டுக்கு அனுப்ப முடியாது என்று அதிகாரி ஒருவர் சொன்னார்.

[illegible]நிலைமை தந்திரமானதாக உள்ளது என்றும் அந்த அதிகாரி சொன்னார். [இ-எ]

## மரண அறிவித்தல்கள்

### க. தெய்வேந்திரன்

சுதுமலை தெற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற கந்தையா தம்பதிகளின் மகன் தெய்வேந்திரன் [காந்தி] நேற்று கனடாவில் காலமானார்.

இவர் சறோஜினியின் [முன்னாள் ஆசிரியை, மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி] அன்புக் கணவரும், கௌரி, வரதன், உருத்திரன், வாகீசன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற திருஞானம், சவுந்தலையின் மருமானும், பேராயிரம்பிள்ளை (வீதி) [கனடா] அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

தகவல்:
சாந்தினி ஜெயந்திரன்
(நல்லூர்)

6, Franca Crescent,
Rex Dale,
Ontario,
CANADA.
M9V 4S2.

(13408)

### அப்பாக்குட்டி கனகசபை

கட்டுவனைச் சேர்ந்த காலஞ்சென்ற அப்பாக்குட்டி இலட்சுமியின் மகனும், காலஞ்சென்ற கந்தையா முத்துப்பிள்ளையின் மருமகனுமாகிய இளைப்பாறிய Highways Dept. பொறியியலாளர் அப்பாக்குட்டி கனகசபை 04-06-1990 அன்று காலமானார்.

இவர் புவனபூபதியின் அன்புக் கணவரும், ரகு [பொறியியலாளர், லண்டன்] பாமினியின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற நமசிவாயம், காலஞ்சென்ற நல்லையா I.P, காலஞ்சென்றதெய்வானை, இராசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற பாலசுந்தரம், றஞ்சிதபூபதி [கனடா], கோபால கிருஷ்ணன் [டென்மார்க்] ஆகியோரது அன்பு மைத்துனருமாவர்.

அன்னாரின் தகனக்கிரியைகள் 06-06-1990 புதன் கிழமை 10-00 மணியளவில் தெல்லிப்பளை கொத்தியாகல் மயானத்தில் நடைபெறும்.

தகவல்:
மனைவி, மக்கள்.

மயிலிட்டி தெற்கு,
தெல்லிப்பளை.

[13343]

### தொம்மைப்பிள்ளை இயக்கோமுத்து

சில்லாலை தெற்கைச் சேர்ந்த தொம்மைப்பிள்ளை இயக்கோமுத்து காலமானார்.

இவர் ஞானம்மாவின் அன்புக் கணவரும், ஹென்றி யோசவ் [புகையிரத நிலைய அதிபர், லண்டன்], புவிராசசிங்கம் [தொழில் நுட்ப உத்தியோகத்தர், பிரதேச சபை, முல்லைத்தீவு], இராஜநாயகம் [தொழில் நுட்ப உத்தியோகத்தர், நீர் வழங்கல் வடிகால் சபை, யாழ்ப்பாணம்], பீற்றர் கனியூட் [சுவிட்சிலாந்து], அருளானந்தம் [சுவிட்சிலாந்து], டெய்சி, காலஞ்சென்ற பற்றிக் இம்மனுவல், ஜோன் பொஸ்கோ [பொறியியல் வளாகம், பேராதனை) ஆகியோரின் அன்புத் தந்தையும், சம்சுல்ஹிதாயா [இங்கிலாந்து], காலஞ்சென்ற மேரிபற்றிமா, யோகரஞ்சினி [உரிமையாளர், பிரபாகர் பார்மஸி, முல்லைத்தீவு], விவியன், இமெல்டா [சுவிட்சிலாந்து], இந்திரா [சுவிட்சிலாந்து], ஜீவரெட்ணம் [கிராம அபிவிருத்தி அதிகாரி, சாவகச்சேரி] ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் 06-06-1990 இன்று புதன் கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு சில்லாலையில் நடைபெறும்.

தகவல்:
குடும்ப அங்கத்தினர்

டெய்சி மகால்,
சில்லாலை தெற்கு,
பண்டத்தரிப்பு.

(13406)

### சின்னத்தம்பி வேலுப்பிள்ளை

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் யாழ். நாச்சிமார் கோவிலடியை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி வேலுப்பிள்ளை 05-06-1990 இல் காலமானார்.

இவர் தங்கமுத்துவின் அன்புக் கணவரும், சிவானந்தன், நாகரத்தினம், மயில்வாகனம் (பிரான்ஸ்) குமாரசுவாமி (பிரான்ஸ்), நாகேஸ்வரி, பரமேஸ்வரி (பிரான்ஸ்), புவனேஸ்வரி, சற்குணேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும் திருமதி சறோஜா, திரு. மஹாகத்தாஸ், திருமதி இந்திராணி, திருமதி தங்கம்மா (பிரான்ஸ்), திரு. பீதாம்பரம் (பிரான்ஸ்), திரு. பாலச்திரன் (பிரான்ஸ்). நகுலேஸ்வரன் (சுவிஸ்) ஆகியோரின் அருமை மாமனாரும், சந்திரிகா, தயாபரன், உஷாந்தினி, கஜீகரன், கௌசல்யா, ஸ்ரீரங்கன், தர்ஷினி, காயத்திரி, கஜேந்திரன், கஜேந்தினி, நிருபா, நிருஜா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற திரு. இளையவி, திருமதி நாகமுத்து ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல 612/2, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக யாழ். கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு இன்று 6/6/90 புதன் கிழமை காலை 10.00 மணியளவில் எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
வே. சிவானந்தன்

612/3, K.K.S வீதி,
யாழ்ப்பாணம்.

(3812)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன்(பிறைவேட்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 229/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 06-06-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org